# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 17 ★ 25-8-57 சென்னை ★ விலை 16 காசு


# ஏர்முனையில் சோகம்!

—(0)—

## நங்கவரத்தில் 2000 குடும்பங்கள் பரிதவிப்பு.

—(0)—

## சட்டத்தை உடனடி திருத்தவேண்டும்.

—(0)—

நிலத்தைத் தொட்டு, இருகரைகளிலும் நீர் வழிய வளைந்தோடும் சிறு சிறு வாய்க்கால்கள்! பச்சைக்கம்பளம் விரித்தாற் போலக் கண்ணுக் கெட்டிய தூரம்வரை பசுமை பரந்திருக்கும் வயல்கள்! ஆற்றுக்கும் வயல்களுக்கும் இடையில் நெகிழ்ந்து, வளைந்து, மறைந்து, மீண்டும் வெளிப்படும் சாலைகள்! அடுத்தடுத்துக் காணப்படும் தென்னஞ்சோலைகள்! குடிசைகள் சூழ்ந்த சிறு சிறு திட்டுகள், குன்றெனு எழும்பிடும் வைக்கோற் போர்கள், மணியசைய வந்திடும் உழவுமாடுகள், நெல் மணிகளைச்சேர்த்திடும் களத்து மேடுகள், அசைந்து செல்லும் பாரவண்டிகள், நீரைத் தாலாட்டி அனுப்பும் மதகோரங்கள், கஞ்சிக் கலயம் தாங்கிச் செல்லும் பெண்கள், கலப்பை தூக்கி முன்னால் செல்லும் ஆண்கள், சிறு கைகளில் சேறெடுத்து விளையாடிவரும் சிறுவர்கள், சாரை சாரையாக உழவர் குடும்பங்கள் போகும் தோற்றம், அப்பொழுது அவர்கள் பாடிச் செல்லும் தெம்மாங்கு!

இயற்கை தரும் காவியம், எழில்மிக்க ஓவியம்! இதை விடப் பொருளும் சுவையும் மிக்க வகையில் தமிழிலக்கியத்தில், தமிழ் நாட்டில் மருதநில மாண்பு சிறந்தோங்கியிருக்கிறது!

அன்று மட்டுமல்ல, இன்றுகூட மேலே குறிப்பிட்ட நீர்வளநிலவளமும் காணக்கிடைக்கிறது, திருச்சிமாவட்டத்தில்! அங்கு குளிர் புனலை அள்ளிவரும் காவிரிக் கரையோரத்தில், குளித்தலைத் தொகுதியில், நங்கவரம் பகுதியில், நேரில் காணலாம்! குளித்தலை குளிர்மை மிக்க இடம், அதில் நங்கவரம் இயற்கை வளத்தை நீங்கா வரமாகப்பெற்ற இடம்! வளங் கொழிக்கும் வயல்கள் சூழ்ந்த இடம், செழுமை தவழும் தோட்டங்கள் நிறைந்த இடம்! அந்த இடத்தைக் காணும்பொழுது, கண்களில் மகிழ்ச்சி தோன்றும், தோன்றவேண்டும்.

ஆனல்——

இன்று அந்தப் பகுதியைக் காணும் பொழுது கண்களில் மகிழ்ச்சியல்ல, கலக்கம் சூழ்கிறது!

குளிர்மையின் மத்தியில் வெப்பம் தாக்கியுள்ளது! பசுமையின் மத்தியில் வரட்சி—வரண்ட மனம் காணப்படுகிறது!

உழவர்களின் கண்களில் ஒளியில்லை; அவர்களின் குரலில் மகிழ்ச்சியில்லை! துயரம், வேதனை, சோகம், இவைகளால் தாக்கப்பட்ட முகங்களைத்தான் காண்கிறோம்!

ஏன் இந்தத் துயரம்?

ஏன் இந்த வேதனை?

ஏன் இந்தச் சோகம்?

வானம வரண்டுவிட்டதா! மழை பெய்யாமற் போய்விட்டதா? குடகு மலையில் மோதுகின்ற மேகக்கூட்டங்கள் குறைந்துவிட்டனவா? அல்லது பெய்த மழை நீர் காவிரியாற்றின் வழியே ஓடிவரவில்லையா? நீர் வந்தபோதும், உழவு செய்யமுடியாதபடி மண்வளங் குன்றிப்போய்விட்டதா?

இயற்கை தரும் இடையூறுகள் ஏதும் நிகழவில்லை. குடகுமலையில் மழை பெய்கிற மழையில் குறைவேற்படவில்லை. எப்பொழுதும் இருப்பதைவிட அதிகமான அளவுக்கு மேட்டூர்த் தேக்கத்தில் தண்ணீர் நிரம்பியுள்ளது. சில இடங்களிலாவது காவிரியாறு குறுகி, செயலிழந்து காணப்பட்ட போதிலும், நங்கவரம் பகுதிக்கருகில் அது "அகண்ட காவிரியாக வேண்டுமளவு நீரைத் தந்து போகிறது! நீர்வளமும், நிலவளமும், ஆண்டுதோறும் களங்களில் குவியும் நெல்வளமும் குறையாமல் இருக்கின்றன!

இருந்தும் உழவர்களின் முகத்தில் மகிழ்ச்சியில்லை, சோகம் கப்பியுள்ளது!

உழவர்களுக்குப் பலனைத்தர, வானம் மறுக்கவில்லை, காவிரி ஆறு மறுக்கவில்லை, மண்வளம் மறுக்கவில்லை!

பண்ணையார் மறுக்கிறார், சட்டம் மறுக்கிறது, அரசாங்கம் மறுக்கிறது!

வானம் பொழிகிறது, ஆறு நீரை அள்ளி வருகிறது, விளைவைத்தர நிலம் காத்திருக்கிறது, உழைப்பைத்தர உழவர்கள் காத்திருக்கின்றனர், ஆனல் நீண்ட நாட்களாக அந்த நிலங்களில் உழுது பாடுபட்ட உழவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்! உழவர்

(11-ம் பக்கம் பார்க்க)

## மொழி வளம்

மொழி ஒரு நாட்டின் முக்கி பண்பாடுகளில் ஒன்று. ஒரு நாட்டைப் பிணைக்கும் முக்கிய தொடர்புகளில் மொழிப் பற்று முதன்மையான தாகும். ஒரு நாட்டின் வரலாற்றில் பெரும் மாறுதல்கள் நேரிடலாம். வரலாறே தெரியாத அளவுக்கு சில நூற்றுண்டுகள் "இருண்டகாலமாக" "குழப்ப நூற்றுண்டுகளாக" போகலாம். நன்று வாழ்ந்த நாடு வீழ்ச்சி யுறலாம், ஆட்சி முறைகள் மாறலாம், தலை நகரங்கள் மறையலாம், நிலப்பகுதிகள் கடலில் அமிழலாம், எல்லைக் கோடுகள் தள்ளப்படலாம், ஆளும் பரம்பரைகள் அழியலாம், அவர்கள் எடுப்பித்த கோட்டை கொத்தளங்கள் மாடங்கள் கூடங்கள் இடிந்து மண்ணுகலாம். இவ்வளவுக்கும் பின்னும் அந்த நாடு இருக்கும், மொழி மட்டும் இருக்குமானல்! வரலாறு தொடர்ந்து வரும் அந்த நாட்டில் மொழி தொடர்ந்து வந்தால்! ஒரு நாட்டை நிலை நிறுத்தும் அடிப்படை மொழி வளமாகும்,

இங்கிலாந்து நாட்டில் ''இங்கிலாந்து வேண்டுமா? ஷேக்ஸ் பியர் வேண்டுமா?" என்று கேட்டால், "ஷேக்ஸ்பியர் வேண்டும்?" என்று தயங்காமல் செல்வார்களாம். மொழி வளத்தில் அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது.

"ஒரு நாட்டுக்கு நேரக்கூடிய பேராபத்து - கோரமான சம்பவம் எது?" என்று ஒரு முறை வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சித் திறனுடைய பின்ன மாலியட் என்பவரைக் கேட்டார்கள். ஒரு நாட்டுக்கு ஏற்படக் கூடிய பேராபத்து என்றதும் எதிரிகளின் படை யெடுப்பு, தாய் நாட்டின் தோல்வி, விடுதலை உரிமை பறிபோவது. அடிமைத்தனம் இவைகள்தாம் மனதில் தோன்றும். ஆனல் பின்ன மாலியட் என்ற வரலாற்றுசிரியர் அவற்றை விட மற்றொரு பெரிய கோரச் சம்பவத்தை குறிப்பிடுகிறார்.

"கட்டுக் கோப்பு உடைந்து சிதறுண்ட ஒரு நாட்டின் கடைசிப் பரிதாபக் காட்சி அதனுடைய அதிகாரம் அழிவதோ அல்லது சிறப்பு சிதைவதோ அல்ல! நாட்டின் பொது நலத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் விடுதலை வாழ்வை இழப்பது கூட அல்ல! பகைவரின் புகைப்படலம் நாட்டில் படர்வதும், எதிரிகளால் துரத்தியடிக்கப்பட்ட மக்கள் சிதறி நாலாபக்கங்களிலும் அகதிகளாக அலறி ஓடுவதும் மாற்றார்கள் நாட்டைச் சூறையாடிச் சொந்தமாக்கிக் கொள்வதும் அலங்கோலக் காட்சிகளாகக் காணப் படலாம். அவ்வாறு நாடு இழப்பது கூடப் பொருட் படுத்தக் கூடிய தொன்றல்ல-ஆனல் கடைசியான மிக்க வேதனையைக் கொடுக்கக் கூடிய கோரச்சம்பவம் எது வென்றால், வளமிக்க தாய்மொழி மெல்ல மெல்ல மங்கி மறைந்து விடலாம்"

நாட்டை இழந்தால் கூட மீட்டு விடலாம், மொழியை இழந்தால், மீட்க முடியாது.

# திராவிட நாடு இலட்சியம்!

—0—

## கள் சபையில் சம்பத் முழக்கம்.

—(0)—

## இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை.

—(0)—

முதல் தடவையாக மக்கள் சபையில் பேச எழுந்த தாழர் சம்பத் அவர்கள், தமக்கே இயல்பான வலிவுட ும் பொலிவுடனும் கருத்துரை தந்துள்ளார். மாநில அர ங்க ஊழியர்களுக்கும் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் டையில் சம்பளவிகிதங்களில் உள்ள வேறு பாடுகளை க்க வேண்டிய தன் அவசியம் பற்றியும், அந்தமான் தீவு ளில் தமிழர் பெரும் பகுதியினராக இருந்தும் பள்ளிக் டங்களில் தமிழ் மொழிக்கு இடம் அளிக்காதது பற்றி ம், இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப் படும் தமிழர் ளுக்கு தக்க புனரமைப்பு உதவிகள் தர வேண்டுமென ும், மாநிலச் சீரமைப்பில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் ற்றியும்மொழிப்பிரச்சினையில் இந்திஏகாதிபத்தியம்தலைதூக் வதைக் கண்டித்தும், திராவிட கோரிக்கையின் வரலாறு ற்றியும் மிகத் தெளிவாக தோழர் சம்பத் பேசியுள்ளார். வர் பேசி முடிந்ததும், பல உறுப்பினர்கள் அருகில் ந்து பாராட்டியதுடன், குறிப்பாக வங்காள உறுப்பினர் ளும் சம்பத் தந்த கருத்துக்களில் பல தங்களுடைய எண் ணங்களைப் பிரதிபலிப்பதாக இருப்பதாகவும் கூறினார்க ளாம்.

தோழர் சம்பத் ஆற்றிய ஆங்கில உரையில், மாநிலச் ரமைப்பு, மொழிப் பிரச்சினை, திராவிட நாடு கோரிக்கை ஆகிய பகுதிகளை மட்டும், மொழி பெயர்த்துக் கீழே தரு றோம்.

மாநிலச் சீரமைப்பு பற்றி எக்கு முன்னதாகப் பல றுப்பினர்களும் குறிப்பாகப் பாய்த் தோழர்களும் பேசி ளார்கள். அதற்கு மேலாக கம் பேசத் தேவையில்லை. நிலச் சீரமைப்பு பற்றிய ச்சினைகள் எல்லாவற்றுக் ் இறுதியான முடிவுகளைக் ண்டு விட்டதாக மத்திய அர ங்கம் கருதுகிறது. இல்லை, நிலச் சீரமைப்பு பற்றிய ச்சினைகள் தீரவில்லை, சுல பத்தில், மந்திர தந்திரம் செய்து அவைகளைத் தீர்த்து விடவும் முடியாது. மாநிலச் சீரமைப்பின்போது, தென்னிந் தியாவில் தமிழர்கள் பெரும் பான்மையினராக வதியும் இடங்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப் படவில்லை. அந்த இடங்கள் தங்கள் மாநிலங் களில் சேர்க்கப் பட்டது நியாய மானதே என ஆந்திர மலையாள நண்பர்கள் நினைக்கிறார்கள். இத்தகைய பிரச்சினைகளில் நியாயமான, பார பட்சமற்ற முடிவைக் காணவேண்டு மென்றால், அந்த இடங்களில் பொதுமக்களின் வாக்கெடுப்பு எடுப்பது தான் முறை. பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்று தான் உரிமைகொண்டாடும் எல்லோருக்கும் திருப்தியளிக் கக் கூடும்.

சென்னை மாநிலத்தைத் தமிழ் நாடு என்று பெயரிடாமல், மக்களின் விருப்பத்தை விடாப் பிடியாக மறுப் பது ஏன் என்று எனக்குப் புரிய வில்லை. மிக எளிய பிரச்சினைகளைக் கூட அரசாங்கம் வெகு சிரமப்பட்டு கடும் கொந்தளிப்புகளாக மாற்று கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு!

இந்திய அரசாங்க மொழி பற்றி ஒரு சில கூற நான் விரும்புகிறேன். மொழிப் பிரச் சினையை மிகக் கவனத்துட னும் யூகத்துடனும் நாம் அணுகவேண்டும். வட இந்திய மொழிகளுக்கும், தென்னிந்திய திராவிடக் குழு மொழிகளுக் கும் பெருத்த வேறு பாடு இருக்கிறது. இரண்டு மொழிப் பிரிவினரிடையேயும் நிலவும் அமைதி நீடிக்க வேண்டு மென்றால், இந்தி பேசாதவர் களிடை இந்தி மொழியைக் கட் டாயப் படுத்த வேண்டு மென்று பெருங் கூச்சலிடும் பேராசைக்காரர்களின் பயங் கரக் கனவுகளை இந்திய அர சாங்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இந்தி வழங்காத இடங்களில் இந்தி ஆதிக்கத் தைத் திணிக்க வேண்டா மென்று, முதிர்ந்த அனுபவம் படைத்தக் காங்கிரசுக் காரர் கள் உட்பட பலர் வேண்டு கோள் விடுத்தும், அறிவுரை கள் பல கூறியும் கடைசியாகக் கடும் எச்சரிக்கைகள் தந்தும், பழைய மொழி ஆதிபத்திய மனப்பான்மையிலேயே சிலர் இருக்கிறார்கள்.

இவர்களுடைய ஆதிக்க நினை வுக்கு ஒற்றுமை என்ற சொல்லைத் துணையாகக் கொள்கிறார்கள். ஒற் றுமை என்பது அடக்குமுறை பலத் தினால் உருவாகக்கூடியதொன் றல்ல.

ஒருவருக்கொருவர் காட்டும் மதிப்பினாலும்அன்பினாலும்தான் ஒற்றுமையை உண்டாக்க முடி யும். ஒற்றுமை கீதத்தை இசைத்துக்கொண்டு அடக்கு முறையை உபயோகித்தால், கிடைக்கக்கூடியது ஒற்றுமை யல்ல, ஒன்றுபடுத்தப்பட்ட அடிமைத் தன்மைதான்!

ஒரு மொழியை அதிகமான மக்களும் மற்றொரு மொழியை குறைந்த அளவு மக்களும் பேசினால், இரண்டாவது மொழிபேசும் குறைந்த எண் ணிக்கையினர் தாழ்த்தப்பட்ட வர்களாகக் கருதப்படவேண் டுமா? ஒரு மொழி ஒரு நாட் நாட்டின் அரசாங்க மொழியாக வேண்டுமென்றால், அந்த மொழியைக் கற்பதனால் உண் டாகும் சாதக பாதகங்கள் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். இந்தச் சமயத்தில் இந்தியாவில் பல மொழிகள் மட்டுமல்ல, பலதேசியப் பகுதிகளும்—நாடுகளும் அடங்கி யிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது." (மக்கள் சபை உறுப்பினர்களில் சிலர் "இல்லை" "இல்லை" என எதிர்ப்புக் கூச்சலை எழுப்பினார் கள்)

"நண்பர்கள் கோபங்கொள் கிறார்கள். திராவிட நாட்டைப் பெறவேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழகத்தினர் பேசும்பொழுதெல்லாம் ஆதிக் கத்திலிருக்கும் காங்கிரசுக் கட் சியைச் சேர்ந்தவர்கள் கோபங் கொள்கிறார்கள், இழித்தும் பழித்தும் பேசுவார்கள்; அவர் களெல்லாம் அத்தகைய திரா விடநாடுவேண்டுகோள் கிளம்பு வதற்கானகாரணங்களைக்காண மறுக்கிறார்கள், சூழ்நிலைகளை ஆராய விரும்புவதில்லை. திரா விடநாடு வேண்டுகோள் ஆரம் பித்த வரலாற்றைப் பார்த் தால், சென்னை மாநிலத்தில் திரு. சி. இராசகோபாலாச்சாரி யார் தலைமையில் மந்திரிசபை அமைந்து, பள்ளிக்கூடங்களில் கட்டாய இந்தி நுழைக்கப் பட்டபொழுது திராவிடநாடு கோரிக்கை உதயமானது என் பது தெரியவரும். தமிழும், தமிழ்ப்பண்பாடும் ஒருபுறம் ஆங்கில ஆதிக்கத்தாலும், மற் றொருபுறம் வடமொழியாளர் பிடிவாதத்தாலும் சீர்குலைப் பட்டிருந்த காலம் அது. பிற மொழிகளைக் கலந்து, தமிழ் பேசுவதே பெருமையுடையதா கப் பலர், அன்று கருதினார் கள்.

கட்டாய இந்தித் தமிழர்களை உறக்கத்தினின்றும் தட்டி எழுப்பியது. 1939ல் திரு. இராசகோபாலாச்சாரியார், திரு. பிரகாசம் போன்றவர்க ளும், இன்று இந்திய மொழிக் குழுவினர் அறிக்கையில் சிறந்த மறுப்புரையைத் தந் துள்ள டாக்டர் சுப்பராயன் அவர்களும் இந்தியைக் கட் டாயப்பாடமாகச் சென்னை மா நிலப் பள்ளிக்கூடங்களில் நுழைத்தார்கள்; மிக உற்சா கத்துடனும், உறுதியுடனும் கட்டாய இந்தியைப்பற்றிப் பேசினார்கள். ஆனால் அதற் குப் பலத்த எதிர்ப்பு வந்தது. அவ்வளவு பெரிய ஆவேச மான எதிர்ப்பை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குத் தலைமைதாங்கிய பெரியார் இராமசாமி அவர்களையும் அறி ஞர் அண்ணா அவர்களையும் நாஸ்திகர்களெனச் சிலர் தூற் றிய போதிலும், நூற்றுக்கணக் கான சமயத் தலைவர்களும், தமிழ்ப் புலவர்களும் அவர்க

(11ம்-ம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ்ப் பெரியோர்கள்.

இயல் இசை நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து விளங்கும் தமிழ்ப் பெரியோர்கள் மூவரை சென்னை அரசாங்கம் சிறப்பித்துள்ளது. தமிழ் நாடக உலகின் தந்தையாக விளங்கும் பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தில் முதன்மை பெற்றுத் திகழும் டாக்டர் மு. வரதராசன், நாடக மேடையிலும் இசைத் துறையிலும் நீண்டகாலம் பணியாற்றியுள்ள கே. பி. சுந்தராம்பாள் அம்மையார், ஆகிய மூவரும் ஆற்றியுள்ள சீரிய பணிக்கு அரசாங்கம் செய்த பெருமை ஒரு பகுதியேயாகும்.

பரிசளிப்பு விழாவின் போது, "எனது வாழ் நாளிலேயே, இந்த நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடப் படுவதையும் காண விரும்புகிறேன்" என நாத் தழதழக்க பம்மல் முதியவர் கூறியபொழுது, தமிழின்பாலும் தமிழ்நாட்டின்பாலும் அவர் கொண்டுள்ள அளவற்ற பற்றும் உணர்ச்சியும் வெளிப்பட்டன. உண்மையில் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றுமே கலைஞர்களின் சிறந்த திறமைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

"இந்த மூன்று பெரியவர்களையும் அரசாங்கம் பாராட்டியிருப் பது, தமிழரையும், தமிழ் நாட்டையும் இசை இயல் நாடகமாகிய மூன்று பெரும் துறைகளையும் பாராட்டுவதாக அமையும்" என தென்னிந்திய நடிகர் சங்க விருந்து விழாவில் புரட்சி நடிகர் எம்,ஜி, இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பம்பல் தந்த செம்மல், டாக்டர் மு. வ, கொடுமுடி அம்மையார், ஆகிய மூவ ரும் முத்தமிழின் பிரதிநிதிகளாகச் சிறப்பு செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மிக மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம், பாராட்டு கிறோம்!

வாழ்க முத்தமிழ்! வளர்க கலைகள்!

மன்றம்

ஞாயிறு 25—8—57 சென்னை

# "அவசரச்" சட்டங்கள்!

மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஏராளமான சட்டங்களைப் போட்டபடி இருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் ஏதாவது ஒரு சட்டத்தைப் போட்டு தற்காலிமாக நிலைமையைச் சமாளிக்க முயல்கிறது.

அரசாங்கம் அவசரச் சட்டங்களைப் போடுகிறது. அதேசமயம் போடுகிற சட்டங்களை அவசர அவசரமாகப் போடுகிறது. நாள்தோறும் சட்டங்களின் தொகை வளர்ந்துகொண்டே இருக்கிறது. மிக அவசரமாகச் சட்டங்களை அள்ளித் தெளிக்கின்ற காரணங்கள், அரசாங்கச் சட்டங்களில் முன்பு இருப்பதைப்போன்ற தெளிவும் உறுதியும் இல்லாமற் போகின்றன. குறைபாடுகளும், குழப்பமான விதிகளும், மிகுந்து வருகின்றன. ஒரு சட்டத்தைப் போட்டதும், அடிக்கடி திருத்தங்களைக் கொண்டு வந்து சட்டசபையில் நிறைவேற்றவேண்டியிருக்கிறது. சட்டத்தைவிட, சட்டத்துக்கான விளக்கம் அதிகமாக இருக்கிறது. அவ்வளவு செய்தபின்னும், குழப்ப நிலைமை நீடிக்கிறது. சட்டம் எதிர்பார்த்த நிலைமைகளில் திருப்திகரமான முறையில் இல்லை.

குறைபாடுமிகுந்த சட்டங்களை அரசாங்கம் குவித்துக் கொண்டே போகும் தன்மையைக் கண்டித்து, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் அண்மையில் பேசியுள்ளார். "ஒரு குறிப்பிட்ட சட்டம் தேவை என ஒருமந்திரி திங்கட்கிழமை நினைக்கிறார், செவ்வாய்கிழமை அது முடிவு செய்யப்படுகிறது, புதன்கிழமையன்று சட்டசபைக்கு வருகிறது, வியாழக்கிழமை அது இருசபைகளாலும் நிறைவேற்றப்படுகிறது, வெள்ளிக்கிழமையன்று அமுலாக்கப்படுகிறது. ஆனால் அடுத்த திங்கட்கிழமை அந்தச் சட்டத்திற்கு எதிராக ஒரு மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. "ஒரு குறிப்பிட்ட சட்டம் அமுலில் இருக்கிறது என்பதைப் பப்ளிக் பிராசிகியூட்டரும், நீதிபதிகளும் அறிந்துகொள்ள முடியாதபடி எண்ணற்ற சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன." இவ்வாறு சட்டங்களை இயற்றுவதில் அரசாங்கம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரே பேசியுள்ளார். அவ்வாறு பேசவேண்டிய அளவுக்கு குழப்பத்தை நமது அரசாங்கம் மிகச் சிரமப் பட்டுச் செய்துவருகிறது.

ஒருசட்டத்தை இயற்றும்பொழுது குறிப்பிட்ட ஒரு நிலைமையையோ, நெருக்கடியையோ மனதிற்கொண்டு அரசாங்கத்தினர் சட்டம் தீட்டிவிடுகின்றனர். அதனால் அந்தச்சட்டம் நீண்ட நாட்களுக்கு, பல்வேறு சூழ்நிலைகளில் பயனற்றுவிடுகிறது. ஆனால் நமது அரசாங்கம் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் சட்டங்களைப் போட்டபடி இருக்கிறார்கள். ஒரு சட்டத்தை விளக்க மற்றொரு சட்டம், இரண்டு சட்டங்களையும் காப்பாற்ற மூன்றாவதாக ஒரு சட்டம். இப்படிச் சட்டங்கள் பெருகிக் கொண்டே போகின்றன. சட்டங்கள் பெருகும் வேகத்தைப் பார்த்தால், எந்தப்பக்கம் திரும்பினாலும் சட்டங்களுடன் மோதிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்தச் சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன என்று ஒரு உயர்நீதி மன்ற நீதிபதிக்கே தெரியாத நிலை ஏற்படுகிறதென்றால், சாதாரணக் குடிமகனால் எவ்வாறு முடியும்?

பண்டைய ரோம் நாட்டில், சட்டங்கள் ஏராளமாக இருந்தனவாம். ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தால் ஒரு பிள்ளையைச் சட்டம்படிக்க என்றே ஒதுக்கிவிடுவார்களாம். அப்படி ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒரு சட்ட நிபுணர் இருந்தால்தான் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும் என்ற நிலை அங்கு ஏற்பட்டது. அதைப்போல, இந்தியாவிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் சட்டம் தெரிந்த ஒருவன் இருந்தால், அவனுக்கு முழுநேர வேலையிருக்கும்.

சட்டமே தேவையில்லை என்று யாரும் கூறமுடியாது. ஆனால் ஏராளமான சட்டங்களைப் போட்டு குறைபாடுகளையும், குழப்பத்தையும் உண்டாக்கக்கூடாது.

மனிதனுக்குஉடை இன்றியமையாததுதான். வெப்பத்தையும், குளிரையும் தாங்க உடைகள் வேண்டும். ஆனால் அதற்காக, ஏராளமான உடைகளை ஒருவன்மீது போட்டு மூடினால் நகரமுடியாமல், மூச்சுத் திணறும்நிலை உண்டாகும். அதைப்போல சட்ட பாரமும் அதிகமாகக்கூடாது.

போடுகிற சட்டங்களை நிதானமாக, ஆராய்ந்தறிந்து தெளிவுற்றவைகளாக உறுதியுள்ளவைகளாக, ஒழுங்குபடுத்தப்பட்டனவாகப் போடவேண்டும். ஒழுங்காக ஒரு சட்டத்தைப் போட்டால், பின் அதைக் காப்பாற்றப் பல சட்டங்களைப் போடவேண்டிய நிலை எழாது.

சட்டமியற்றும்பொழுது அதற்குரிய ஒழுங்கானமுறைகளை அரசாங்கம் சரியாகச் செய்வதில்லை. முதலாவதாக சட்டசபையில் ஒரு சட்டத்தை நிறைவேற்ற முன்வரும்பொழுது, அந்தச் சட்டத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து திருத்தங்களை உதவுவதற்கான நேரத்தையும் அவகாசத்தையும் அரசாங்கம் சட்டசபை உறுப்பினர்களுக்குத் தருவதில்லை. சட்டத்தை நிறைவேற்றுமுன், முதலில் வரப்போகும் சட்டத்தை முன்கூட்டிப் பிரசுரித்தல், இரண்டாவது சட்டசபைமுன் அதை வைத்தல், மூன்றாவதாகச் சட்டத்தைப் பற்றிய விதாதத்தைத் துவக்குவதல்—இவ்வாறு மூன்று கட்டங்களைத் தாண்டி வரவேண்டும். ஒவ்வொரு கட்டத்தை அடுத்தும்,குறிப்பிட்டநாட்கள் அவகாசம் கிடைக்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் அரசாங்கம் முதலிரண்டு கட்டங்களை ஒரேயடியாகத் தாண்டி, திடீரென்று சட்டசபையில் வரப்போகும் சட்டத்தைப்பற்றிய விவாதத்தைத் தொடங்கி, அரைநாள் அவகாசத்தில் எல்லாவற்றையும் அவசரம் அவசரமாக முடித்துவிடுகிறார்கள். எண்ணிக்கை பலம் இருக்கிறகாரணத்தால் கொண்டுவருகிற சட்டங்களெல்லாம் நிறைவேறிய போதிலும், சட்டங்களில் இருக்கிற குறைபாடுகளை சரிவரக் கவனிக்க முடிவதில்லை. எவ்வளவு அவசரத்துடன் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றுகிறதோ, அவ்வளவு விரைவில் அதற்கான திருத்தத்தையும் அரசாங்கம் கொண்டுவரவேண்டியிருக்கிறது.

சட்டங்களில் காணப்படும் குழப்பம் ஒருவகையில் ஆட்சியாளரிடம் காணப்படும் குழப்பத்தைக் காட்டுகிறது. மந்திரிசபையினர் கொள்கையளவில் ஒன்றைப் பேசுகின்றனர், ஆனால் நடைமுறையில் சிலருக்குப் பணிந்துபோய் பேசியதற்கு மாறுபாடாக நடக்கவேண்டியிருக்கிறது. ஒரு கரத்தில் சோஷியலிசத் தீர்மானத்தைக் காட்டுகிறது, மற்றொருகரத்தால் டாடா-பிர்லாக்களைத் தட்டிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த முரண்பாடு போடுற சட்டங்களில் பிரதிபலிக்கிறது. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள முரண்பாடு நீங்கினால்தான் தெளிவான சட்டங்களை உருவாக்க முடியும்.




**வினா:** இளைஞரின் மனதைக் கெடுக்காதீர் என்று திரு காமராஜ் அவர்கள் திருச்சிப் பொதுக்கூட்ட மொன்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தார்க்கு அறிவுரை பகர்ந்துள்ளாரே, அதுபற்றிய கருத்து என்ன?

**விளக்கம்:** தோழர் காமராசர் அவர்கள் ஆழ்ந்த சிந்தனை செய்தோ அல்லது நீடிய ஆராய்ச்சி புரிந்தோ, அல்லது காரண விளக்கங் கண்டோ திராவிட முன்னேற்றக் கழகத்தார்க்கு அறிவுரை பகரவந்ததாகத் தெரியவில்லை. அவர் முதலமைச்சர் அணையில் வீற்றிருக்கிற காரணத்தாலும், முதலமைச்சர் வாயினின்றும் ஏதேனும் சொல் முத்துக்கள் விழுமா என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிற காரணத்தாலும், முதலமைச்சர் என்ற முறையில் ஏதேனும் சொல்லியே தீரவேண்டும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டு விடுகிற காரணத்தாலும், பொருளிருக்கிறதோ அல்லது இல்லையோ அதைப்பற்றிக் கவலைப்படாமல், உண்மை பொதிந்திருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றியும் கவலையுறாமல், அறிவுரை பகருவதாக எண்ணிக்கொண்டு ஏதோ சொற்களைக்கொட்டியிருக்கிறார் என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

இளைஞரின் மனது எப்படியிருந்தது, அது இப்பொழுது எப்படிக் கெட்டுப்போயிருக்கிறது, அது கெட்டுப் போவதற்குத் திராவிடமுன்னேற்றக் கழகத்தார் எப்படிக் காரணமாய் இருந்து வருகிறார்கள் என்பதற்கான விளக்கங்களைத் தெளிவாக அலசிக் காட்டிவிட்டுப் பிறகு இளைஞரின் மனதைக் கெடுக்காதீர் என்று அறிவுரை கூற அவர் முன்வந்திருப்பாரேயானால், அவரை அறிவுத் தெளிவுடையவர் என்றுவது கொள்ளலாம்.

இளைஞர்கள் கெட்டுப்போய் விட்டார்கள் என்று தோழர் காமராசர் அவர்கள் எதைக் கொண்டு கூற முற்பட்டுள்ளார் என்று ஆராய்ந்து பார்த்தால், இளைஞர்கள் பெருவாரியாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்து இணைந்து நிற்கும் தன்மை அவரை அவ்வாறெல்லாம் எண்ண வைத்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

இளைஞர்களும் மாணவர்களும் ஒரு காலத்தில் காங்கிரசிடம் முழுப்பற்றுக் கொண்டு பெருவாரியினராக அதில் சேர்ந்திருந்தனர். அப்பொழுதெல்லாம் தோழர் காமராசர் அவர்களுக்கும், அவர்போன்ற பிறர்க்கும் இளைஞர்கள் மிக நல்லவர்களாகவும், கெட்டுப்போகாதவர்களாகவும் காணப்பட்டார்கள். ஆனால் அப்படிப்பட்ட இளைஞர்கள், இப்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உண்மையான கொள்கை, உறுதியான கோட்பாடு, நேர்மையான திட்டம், நாணயமான நடவடிக்கை, நியாயமான பேச்சு ஆகியவற்றிலேயே பற்றுக்கொண்டு கழகத்தில் ஈடுபாடு கொண்டு விளங்குவது தோழர் காமராசர் அவர்களின் கண்ணையும், கருத்தையும் பெருமளவுக்கு உறுத்துகிறது. எனவேதான், தமக்குக் கிடைக்காத ஒரு செல்வம் பாழாய்ப்போய்விட்ட ஒரு செல்வம் என்று அவர் கருதுகிறார். எட்டிப்பார்த்து பறிக்க முடியாமல் போகவே, பிறகு எட்டாத உயரத்தில் இருக்கும் திராட்சைப் பழத்தைப் பார்த்து, "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்!" என்று நரி ஒன்று கூறியதாகக் கதை ஒன்று சொல்வார்கள். தோழர் காமராசரின் கூற்றைக் கவனிக்கும் போது அந்த நரியின் கதைதான் நினைவுக்கு வருகிறது. தனக்கு எட்டாத பழத்தை நரி எப்படிப் 'புளிக்கும் பழம்' என்று குறிப்பிட்டதோ, அப்படியேதான் தமக்கு எட்டாத இளைஞர்களைக் கெட்டுப்போனவர்கள் என்னும் கருத்துப்பட தோழர் காமராசர் கூறுகிறார். இளைஞரின் ஆதரவு தம் கட்சியான காங்கிரசிற்கு அவ்வளவு மிகவாகக் கிடைக்கவில்லையே என்ற ஆத்திரம் அவரை அப்படியெல்லாம் பேசவைத்திருக்கிறது!

காங்கிரசை விட்டுக் கழகத்தின் மீது இளைஞர்களுக்குப் பற்று ஏன் ஏற்படுகிறது என்று பார்த்தால், காங்கிரசின் கொள்கை 'உளுத்த சரக்காகப்' போய்விட்டது என்பதையும், கழகத்தின் கொள்கை உறுதியான, பயன்படும் 'அயன் சரக்காக', விளங்குகிறது என்பதையும் இக்கால இளைஞர்கள் உணருகிறார்கள் என்று பொருள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் இளைஞர்களுக்குப் பதவி - பட்டம் - படாடோபம். ஆகிய ஆசைகளைக்காட்டியோ அல்லது அச்சமூட்டியோ, அல்லது பலாத்காரத்தைப் பயன்படுத்தியோ, இளைஞர்களைத் தம் கழகத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை. இளைஞர்கள் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் போக்குகளையும், நடவடிக்கைகளையும், கொள்கைகளையும் ஒன்றோடொன்று வைத்து ஒப்பிட்டுப் பார்த்ததன் பிறகுதான் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து நின்று பாடுபட விரும்பி முன் வருகிறார்கள். அப்படி விரும்பி முன் வருபவர்களைத்தான் கழகம் தழுவிக்கொள்கிறது.

கழகத்தார் எந்தவிதத்தில் இளைஞர்களைக் கெடுத்துவிட்டார்கள் என்பதற்கு ஏதாவது தெளிவாகத் தோழர் காமராசர் அவர்களால் கூறமுடிந்திருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. கழகத்தில் இணைந்திருக்கும் இளைஞர்களை ஒருபக்கமும் காங்கிரசிலோ அல்லது மற்ற இயக்கங்களிலோ இணைந்திருக்கிற இளைஞர்களை மற்றொரு பக்கமும் நிறுத்தி இருசாராரையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அறிவு, ஆற்றல், வீரம், தீரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம், ஒழுக்கம், கொள்கைஉறுதி, செயலாற்றும் திறம் ஆகியவற்றில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களே சிறந்து விளங்குவதை எங்கும் எப்பொழுதும் காணலாம். அறிவுத்தெளிவும், ஆராய்ச்சித்திறனும், அழகு தமிழில் பேசும் வன்மையும், வாதாடும் திறனும் தி. மு. கழக இளைஞரிடத்தில் மிகச்சிறந்து விளங்குவதை மாற்றாரும் ஒப்புக்கொள்ளவே செய்வர். இழிசெயல்கள் புரிவதையும், இழிமொழிகள் பேசுவதையும், மாற்றுக்கட்சிகளின் இளைஞர்களிடத்தில்தான் நிரம்ப நிரம்பக் காணமுடியுமேயல்லாமல், தி. மு. கழக இளைஞர்களிடத்தில் காணமுடியாது.

தோழர் காமராசர் அவர்களின் காங்கிரசு, இளைஞர்களைத் தீண்டாமலேயே- 'கெடுக்காமலேயே' வாழ்ந்து வருகிறதா? அதுவும் இல்லையே! காங்கிரசு, 'இளைஞர் காங்கிரசு' என்று ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு, இளைஞர்களைத் தம் பக்கம் ஈர்க்க எவ்வளவோ முயற்சிகள் செய்துதான் பார்க்கிறது. காங்கிரசு பெண்கள் தொண்டர் படைகளைக் கூட ஆங்காங்கு வைத்துக்கொண்டுதான் பாடுபட்டிருக்கிறது. ஆனால் தி. மு. கழகமோ அப்படிப்பட்ட இளைஞர் அமைப்புகளைத் தனியாக ஏற்படுத்திக் கொள்ளாமல்தான் வளர்ந்து வருகிறது.

காங்கிரசைவிட தி. மு. கழகத்திடம்தான், இளைஞர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஆற்றல் மிகவாகப் படிந்திருக்கிறது. எனவேதான் இளைஞர்கள் தி. மு. கழகத்தின் பக்கம் வந்து நிற்கிறார்கள்.

இளைஞர் தி. மு. கழகத்திடம் சேர்வதைத்தான் கெட்டுப்போவதாகக் கூறித்தோழர் காமராசர் அவர்கள் புலம்புகிறார்கள், இது பொறாமைக் காய்ச்சலால் ஏற்பட்டபுலம்பல் என்றுதான் கொள்ளவேண்டும்.

தி. மு. கழகத்தார் மாணவர்களைக் கெடுத்து வருவதாகவும் தோழர் காமராசர் போன்றவர்கள் அடிக்கடி குறை கூறி வருகின்றனர். அப்படி அவர்கள் சொல்லுவதற்குக் காரணம் மாணவர்கள் தங்கள் அணிக்கு வராமல் தி. மு. கழகத்து அணியின் பக்கம் நிற்கிறார்கள் என்பதனால் ஏற்பட்ட பொறாமைக் காய்ச்சலேயாகும்.

உள்ளபடியே சட்ட மறுப்பு இயக்கம் நடத்திய காலத்தில் காங்கிரசுக் கட்சியினர் தாம் மாணவர்களைப் பள்ளிகளை விட்டு வெளியேறும்படி தூண்டியவர்கள். ஆனால் தி. மு. கழகம் எப்பொழுதும் மாணவர்களைப் பள்ளிகளைவிட்டு வெளியேறும்படி தூண்டியதில்லை; அந்த வகையில் மாணவர்களைக் காங்கிரசுக்காரர்கள்தாம் கெடுப்பவர்களாக விளங்கினார்கள்.

மாணவர் இயக்கத்தைப் பக்குவமாக நடத்தி வருவது தி. மு. கழகமேயாகும். மாணவர்கள் அறவே அரசியலில் கலக்கக்கூடாது என்றும் சொல்லுவதில்லை; மாணவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் கலக்கவேண்டும் என்றும் கூறுவதில்லை; மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்ளுகிற அளவுக்குப் புரிந்து கொள்ளுகிற அளவுக்குக் கல்வியைப் பாழ்படுத்திக் கொள்ளாத அளவுக்குக் கலந்து கொள்ளலாம் என்றுதான் கழகம் கூறிவருகிறது.

தி. மு. கழகம் புதியதொரு சிறந்த இளைஞர் சமூகத்தை உருவாக்கி, அதனை அறிவும், ஆற்றலும், எழுச்சியும், உணர்ச்சியும் கொண்டதாக ஆக்கிடும் பணியில்தான் ஈடுபட்டிருக்கிறதேயல்லாமல், இளைஞர்களைக் கெடுக்கவில்லை என்பதை நடுநிலையாளர்கள் அனைவரும் நன்கு உணர்வர்.

இரா. நெ

# 2 கோடி ரூபாய் செலவில்!

——(0)——

## வெளிநாட்டார் தங்க உல்லாச விடுதி

——(0)——

## இந்தியாவின் ஏழ்மையை ஆடம்பரத்தால் மறைக்க முடியுமா?

——(0)——

இந்திய அரசாங்கம் போடுகின்ற திட்டங்களில் வெளிப்பகட்டும், மினுமினுப்பும் அதிகமிருக்கின்றன. பார்க்கும் பொழுது பிரமாதமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இவர்கள் போடுகின்ற திட்டங்களும், கட்டுகின்ற கட்டடங்களும் இருக்கின்றன.

திட்டங்களைப் போடும் பொழுதே, அமெரிக்காவில் இருக்கும் அணைக்கட்டைப் போல் அவ்வளவு உயரம், ஐரோப்பாவில் இருப்பதைப் போன்ற மிகப்பெரிய மின்சாரக்கூடம், ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை, என்று பிறநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்கிறார்கள்.

"எங்கள் நாட்டில் இவ்வளவு பெரிய அணைக்கட்டு கிடையாது" என்று ஈரான் மன்னரோ, சீனத்துப் பிரதமரோ பக்ராநங்கலைப் பார்த்துச் சொன்னால், அதைக்கேட்டுப் பண்டிதநேரு குதூகலமடைகிறார்.

"எங்கள் நாட்டில் இருப்பதைப்போன்று அழகான கட்டடங்கள் குளிர்ந்த அறைகள்!" என்று அமெரிக்க விருந்தினர் சொன்னால் பண்டித நேருவின் காது குளிர்கிறது.

வருகின்ற வெளிநாட்டாரின் கவனத்தைக் கவருமளவுக்குக் கட்டடங்களும், வேலைப்பாடுகளும் செய்யப்படுகின்றன.

நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மனதிற்கொள்ளவில்லை. நாட்டில் நெளியும் ஏழ்மையை, வாட்டிடும் வறுமையைப் போக்கிட அரசாங்கம் மறந்துவிட்டது.

சேரிகள் அதிகமாகின்றன. பெரிய நகரங்களில் நடைபாதை ஓரங்களில் வாழ்க்கை நடத்தும் குடும்பங்கள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. பஞ்சைப் பராரிகள், பட்டினி கிடப்பவர்கள், பிச்சைக்காரர்களின் கூட்டம், கைகால் அழுகி காணச் சகிக்கவொண்ணத் தோற்றங்கள் இருக்கின்றன. இந்த மனித குலத்தின் ஏழ்மைக் குறைகள், நாளுக்குநாள் வளர்ந்தபடி இருக்கின்றன. ஒருபுறம் ஏழ்மைச் சேற்றின் துர்நாற்றம் வீசுகிறது, மற்றொருபுறம் மாடமாளிகைகள் கட்டப்படுகின்றன, பன்னீர் தெளித்து விருந்துபசாரம் நடத்தப்படுகிறது!

வெளிநாட்டாரிடம் பெருமை சம்பாதிக்கவேண்டுமென்பதற்காக கோடிக்கணக்கில் செலவிட்டு உல்லாச விடுதிகள் கட்டப்படுகின்றன.

டில்லி நகருக்கருகில் இந்திய அரசாங்கத்தினர் ஒரு உல்லாச விடுதி கட்டினார்கள், "அசோகா ஹோட்டல்" என்ற அந்த உல்லாச பவனத்துக்குச் செலவான தொகை 2கோடி ரூபாய்!

இரண்டு கோடி ரூபாயில் ஏன் ஒரு ஹோட்டல், அதிலும் அரசாங்கப் பணத்தில்? யாராவது தனிப்பட்டவர்களுக்கு விட்டிருக்கலாமே! இல்லை. மக்களிடம் கசக்கிப் பிழியப்பட்ட வரியிலிருந்து, 2 கோடி ரூபாய்கள் ஒரு உல்லாச விடுதி கட்ட அரசாங்கத்தால் செலவிடப்பட்டுள்ளது.

ஏழை இந்தியாவில் இவ்வளவு ஆடம்பரமான உல்லாச விடுதி தேவைதானா என்றால், "ஆமாம்" என்று நேரு பண்டிதர் சொல்லுகிறார்.

"அந்த ஹோட்டலை நடத்துவதால், இலாபமா, நஷ்டமா?" என்றால் "நஷ்டம்தான்!" என்று நேரு இழுத்தாற்போல் சொல்லுகிறார். இரண்டு கோடி ரூபாய் செலவிட்டபின், மாதந்தோறும் மேற்கொண்டு அதை நிர்வகிக்கப் பணம் தரவேண்டியிருக்கிறது.

பண்டித நேரு இதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார், அங்கு வால்டார்ப் என்ற பெரிய ஓட்டலைப் பார்த்திருக்கிறார். அவர் பிரான்சு சென்றிருக்கிறார், சவாய் என்ற உல்லாச விடுதியைப் பார்த்திருக்கிறார். இங்கிலாந்துக்குச் சென்றிருக்கிறார், அங்கு பெரிய ஓட்டல்களைப் பார்க்கிறார். வெளிநாடுகளில் சுற்றிவிட்டு இந்தியாவுக்கு வந்ததும், இங்கும் அதைப்போல உல்லாச விடுதிகள் கட்ட முற்படுகிறார். இந்தியாவின் வறுமையில் அத்தகைய வீண் ஆடம்பரங்கள் தேவைதானா என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

அசோகா ஓட்டல் 2 கோடி ரூபாயில் கட்டப்பட்டது.

அசோகா ஓட்டலைப் போன்று மற்றொரு ஓட்டல் துர்காபூர் இரும்புத் தொழிற்சாலை அருகே கட்டப்போகிறார்களாம். அசோகா ஓட்டலைப் போல அதற்கும் இரண்டு கோடி ரூபாய் செலவாகலாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ வடநாட்டில் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் உண்டாக்கப் போகிறார்கள். அவற்றில் ஒன்றான துர்காபூரில் உண்டாக இருக்கும் தொழிற்சாலை அருகே, வெளிநாட்டார் வந்தால் தங்குவதற்குத் தகுந்த ஓட்டல்ஒன்றை சுமார் இரண்டு கோடி ரூபாயில் கட்டப்போகிறார்கள்!

அவர்கள் கட்டுவது இந்தியாவிற்குத் தகுந்த அளவில்- இந்தியா தாங்கக்கூடிய அளவில் இல்லை. வெளிநாட்டார்- அமெரிக்கரும் ஐரோப்பியரும் பார்த்தால் புகழத்தக்க அளவில் உல்லாச விடுதியை எழுப்புகிறார்கள்.

ஒருபுறத்தில் சிக்கனத்தைப் போதிக்கிறார்கள், மறுபுறம் கோடிக்கணக்கில் செலவிட்டு உல்லாச விடுதிகளைக் கட்டுகிறார்கள்.

வெளிநாட்டார் தங்க, வசதியான அளவில் சில லட்சங்கள் செலவில் கட்டடங்கள் க[...] வைத்தால் போதாதா? ஆ[...]பரத்துக்கும் வீண் பெருமை[...]கும் கோடிக்கணக்கில் ஏ[...] செலவிடவேண்டும்?

கோடிக்கணக்கில் வரிப்ப[...]த்தை வீணாக்கி ஒரு சில உ[...]லாச விடுதிகளைக் கட்டிவி[...]தால், இந்தியாவின் வறு[...] நிலைமையை மறைத்துவிட[...]மென அரசாங்கத்தார் நினை[...]கிறார்களா?

உல்லாச விடுதியிலிருக்[...] அதன் அருமைபெருமைகளை[...] பார்த்து மகிழ்ந்தாலும், வெ[...]யில் வந்ததும் நாட்டில் சூ[...] திருக்கும் ஏழ்மையை, பஞ்ச[...]தை, தாழ்ந்த குடிசைகளை[...] பிரிந்த கூரைகளை, பிணியாள[...]களை, பிச்சைக்காரர்களை அ[...]கள் பார்க்கத்தான் வேண்[...]யிருக்கும்.

குடிசைகளின் மத்தியி[...] பெரிய மாளிகையை எழுப்[...]வது, சூழ்ந்திருக்கும் வறுமை[...]யின் அளவை இன்னும் அதி[...]மாக ஆக்குவதாகத்தான் மு[...]யும்.

இந்திய அரசாங்கத்தின[...] கோடிக்கணக்கான ரூபாய்[...]களைச் செலவிட்டுக் கட்டுகி[...] பெரிய உல்லாச விடுதிகள் வெளிநாட்டாரிடம் பெருமை சம்பாதிக்க உதவலாம். ஆனா[...] அவை உள்நாட்டில் இருக்கு[...] ஏழ்மையின் கோரத்தை அதி[...]மாக்கித்தான் காட்டுகின்றன.



பூமியைச் சுற்றிவரச் செயற்கைத் திங்கள் விடப்படுகிறது. இவ்வாறு பூமியிலிருந்து விடப்படும் செயற்கை உருண்டைகள், 200 லிருந்து 1500 மைல் உயரம்வரை மேலே சென்று பூமியைச் சுற்றி வட்டமிட்டு வந்தபடி இருக்கும். இந்த உருண்டைகள் மணி ஒன்றுக்கு 18,000 அல்லது 19,000 மைல் வேகத்தில் சுற்றி வரும். உலகில் பல நாடுகளில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையங்களில் இருக்கும் பெரும் தொலைநோக்காடிகள் "செயற்கைத் திங்களை" கண்காணிக்கும். இந்த உருண்டைக்குள் நுட்பமான ரேடியோ இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை வானின் பல உயரங்களில் உள்ள தட்பவெப்ப நிலைகளையும் மின் அலை சக்திகளையும் பூமியில் உள்ள தொடர்பு நிலையத்தில் இருக்கும் ரேடியோ மூலம் தெரியச் செய்யும்.

பூமியைப்பற்றிய ஆராய்ச்சி நடத்தும் இந்த ஆண்டில் இது போன்று "செயற்கைத் திங்கள்" பல விடப்படும்.

# வாழ்வு

(நெல்லை அருணன்)

“விடாதே! பிடி!
த்து!” என்று வெருட்
கொண்டே ஓடிவந்தனர்
ாலிசுக்காரர்கள். அவர்
ருக்கு அதிகாரிகளால் இடப்
டிருந்த உத்திரவு அது.
தைத்தானே செய்யமுடியும்
ர்களால். அவர்கள் துரத்
செல்லுவது ஒரு கொலை
ளையோ திருடனையோ
ாடிய குணங்களும்
லும் வாய்ந்த ஒரு முரட
யோ அல்ல. அவளொரு
ண். சமுதாயம் அவளுக்கு
தெந்தந்தப் பெயரிட்டழைத்
ந்தாலும், இயற்கை அவ
க்குத் தன் வேலை தீர்ந்து
டதென்று போய்விட
லை. எழிலையும் பருவங்களை
ம் சேர்த்துக்கொண்டிருந்
து. அதன் அரவணைப்
லயே அவள் வளர்ந்தாள்.
வள் மட்டுமல்ல, எத்த
யோ பேர் அப்படித்தான்
ர்க்கப் பெற்றிருந்தாலும்,
றிப்பிட்ட ஒரு சிலரைத்
னே நாம் கண்ணால் காண
கிறது. அந்த ஒரு சிலருள்
ருவளான அவள்தான் கமலம்.
லமென்கின்ற சொல்லுக்
ம் பெயருக்கும் பொருந்திய
ா என்று வருணித்துக்
றும் கவிதை கதைகளின்
ணைப்புக்கு அப்பாற்பட்டிருந்
ள் அவள். சமுதாயத்தின்
டும்பிடியில் பட்டு, அதன்
லால் ‘விபசாரி’ என வழங்
பட்டபட்டத்தோடு வாழ்ந்து
ந்தாள்.

ந்தப் பட்டத்தையும் வழங்
கின்ற சமுதாயம்ஒரு பயங்கர
சியக்கருவி என்பதை அவள்
ப்படி உணர முடியும். ஒரு
றிப்பிட்ட பட்டத்தை வழங்கி
ட்டுத் ‘தங்களை மறைத்து
ழும் பெரிய மனிதர்கள்தான்
முதாயம்’ என்று கூற அவ
க்கெப்படித் திறமை வரும்.
முதாயம் தீர்ப்புவழங்கிவிட்ட
ன்னர் எத்தகைய சிந்தனை
ளரும் அதைப்பற்றிச் சிந்
க்கத் திறமற்று ஓய்ந்துவிடு
றார்கள் என்றால் ஒதுக்கப்
ட்டுவிட்ட அவள் எம்மாத்தி
ம். அதன்படியேதான் அவள்
டினாள்-போலீசார் துரத்
னர். இனிமேலும் ஓடி
ளிந்துகொள்ள முடியாத
லையை அடைந்துவிட்டாள்.
ந்த நிலையை எதிர்பார்த்து
ரட்டிச்சென்ற‘அவர்கள்சற்று
கமாகவே சென்று நெருங்
ம் தருணம் பக்கத்திலிருந்த
ரு ஹோட்டலுக்குள் நுழைந்
துகொண்டாள். நல்லவேளை
ாக அங்கே ‘அவளைப் போன்
ர் நுழையக்கூடாது’ என்ற
அறிவிப்புப் பலகையில்லை.
அங்குக ஓர்புறம் தனிமையி
லிருந்த ஒரு மனிதரைச் சூழ
இருந்த பல நாற்காலிகளை
நோக்கி ஓடிச்சென்றாள்.

தனிமையில் அமர்ந்திருந்த
அந்த மனிதர் அவள் தவிப்
பையும் திகைப்பையுங்கண்டு
“இப்படி உட்கார்” என்று
சைகை காட்டினார். அவர்குறிப்
பிட்ட இடத்தில் உட்கார்ந்
தாள். அவ்வாறு அவளுக்கு
இருக்க இடங்காட்டியவர்கள்

பலருண்டு என்றாலும், தற்போதைய அவள் நிலையில்-எந்தவித ஆதரவுமற்ற தன்மையில் அவர்காட்டிய சலுகை உலகத்தைவிடப் பெரிதாகத் தோன்றியது அவளுக்கு. அவளது பார்வையும் நாட்டமும் ஹோட்டலின் வாயிற்படியை நோக்கியவாறே இருந்தது. போலீசார் வந்துவிடுவார்களோ என்ற அச்சம் அவளை வாட்டிக்கொண்டிருந்தது. இதர்க்கிடையில், சர்வர்வந்து என்னவேண்டுமென்று கேட்டு நின்றான். அவனிடம் என்ன பதில் கூறுவதென்றே அறியாமல் திகைத்தபோது அந்தத் தனிமனிதர் ‘தனக்குக் கொடுத்தது போலவே அங்கேயும்’கொடு’ என்றார். அப்போதும் சைகைதான் பேசியது. அவள் கண்ணும் கருத்தும் அங்கேயில்லை. போலீசாரின் வருகையிலேயே இருந்தது. போலீசாரும் வந்துவிட்டனர். அவர்கள் வந்தவுடன் அவர்களைக் கவனிக்காதவள்போல் வேறுபக்கம் திரும்பிக் கொண்டாளென்றாலும் அவளது முகத்தோற்றம் மட்டும் மாறுபட்டுவிட்டது. “எழுந்து ஓடிவிடலாமா” எனக்கருதினாள். தன்னை இழிவுபடுத்தி அவர்கள் பேசப் போவதை எண்ணினாள். அவற்றைத் தனிமையில் அவள் ஏற்றுக்கொள்வதானாலும், நாலுபேர்நடுவே-அதுவும் தனக்கும் ஒரு இருக்கைதந்தவரின் எதிரே அந்தச் சொற்களுக்குத் தான் ஆளாவதை அவர் விரும்பவில்லை! ஆகவே எழுந்திருக்க எத்தனித்தாள். அதற்குள் சர்வர் அவளுக்கெனச் சில சிற்றுணவு வகைகளை வைத்தான். அது அவள் முயற்சிக்குத் தடைவிதித்தது. வேறு வகையற்று உணவில் கைவைப்பதற்குமுன் கைகழுவச் செல்வதுபோல் கையைப் பார்த்தவண்ணம் எழுந்தாள். அப்போது போலீசாரின் அதட்டல் அவளை நிறுத்தியது!

“ஏய்! என்ன திமிரடி உனக்கு! எங்களை ஏமாற்றி விட்டு ஓடவா நினைச்சே! சீ-சீ! எழுந்திரு! எங்கே இருந்தாலுந்தான் உன்மூஞ்சி காட்டிக் கொடுத்து விடுகிறதே”

என்று கூறிமுடிக்கவும், தனக்கு இருக்க இடந்தந்த அந்த மனிதரின் முகத்தைப் பார்த்தாள். சூழ்நிலையைப் புரிந்து கொண்டவர் போன்றிருந்தது அவர் தோற்றம்.

“பரவாயில்லை! உட்கார்” என்பதுபோல் அப்போதும் சைகையாலேயே உணர்த்தினார். அதைக் கண்டதும் சற்றுத் துணிவுடன் அமர்ந்திருந்தாள்.

“இந்தா! சொல்றது தெரியலெ! உட்கார்ந்திருக்கிற இடத்தைப் பாரு, அவருகூட உட்கார உனக்கென்னடி யோக்யதை இருக்கிறது. எவ்வளவு பெரிய மனிதர்! அவர் புகழென்ன அந்தஸ்தென்ன! அவர் பக்கத்திலே நீ! சீ சீ எழுந்திரு.”

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அந்த மனிதர் சற்றே முறுவலித்தார். அந்த முறுவலில் “சமுதாயம் ஒரு தனி நபருக்கு எத்தகைய மதிப்பளிக்கிறது; அதே நேரத்தில் எந்தவிதச் சிந்தனையுமின்றி மற்றொரு தனி நபரை எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்ற உரிமையை வழங்கி இருக்கிறது” என்று எண்ணுவது வெளிப்பட்டது.

“சொல்றது காதிலேவிழலெ! எழுந்திருக்கிறாயா இல்லையா”

என்று கேட்டபோது அந்த மனிதர் தலையை நிமிர்த்தி “அவளை ஏன் எழுந்திருக்கச் சொல்கிறீர்கள்” என்று கேட்பதுபோலப் பார்த்தார். அதற்குப் பதில் கூறுவதுபோல்,

“உங்களுக்குத் தெரியாது சார். இவளொரு பேய்! பெண்ணினத்திலே வந்துதித்த நடமாடும் நாசம். வேசி, இவள் வசப்பட்டு வீடு வாசல் பெண்டு பிள்ளைகளை இழந்து தவிப்பவர்கள் பலபேர். இவள் ஒருத்தி தொலைந்தாலே போதும். ஊர் உருப்பெற்றுவிடும்”

என்று கூறி முடிப்பதற்குள்,

“அவளென் மனைவி” என்று அந்த மனிதர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

“சார்! வேண்டாம் சார்! வீணாக உங்கள் பெருமையைப் பாழாக்கிக் கொள்ளுகிறீர்கள். உங்கள் புகழுக்கும் கீர்த்திக்கும் அழிவைத்தேடிக்கொள்ளுகிறீர்கள். நாடறிந்த வியபசாரி அவள். நாலுபேர் மதிக்க வாழுபவர் நீங்கள்”

“என் மனைவியை அவமானம் செய்ததாக உம்மீது குற்றம் சாட்டமுடியும் என்றால்”

“அதிகாரத்துறையோடு பகைத்துக்கொள்வது அவ்வளவு நல்லதல்ல”

“நானொரு வழக்கறிஞன்”

“அதனாலேயே எதையும் செய்துவிடலாம் என்று எண்ணிவிடாதீர்கள்”

“அதையே உமக்குத் திருப்பிக் கூற விரும்புகிறேன். உத்தியோகத் துறையின் தகுதிப்படி நடந்துகொண்டாலும் உரிய சந்தர்ப்பத்தில் சிந்திக்கவேண்டும். அதைத்தான் எடுத்துக் காட்டுகிறேன் உமக்கு! இவளைப்பற்றிக் கூறிய செய்திகளைத்தான் நீங்கள் கேட்டீர்கள். அதற்காக வழங்கப்பட்டிருக்கும் பட்டத்தையிட்டு அழைக்கிறீர்கள். ஆனால் அவளைப் பற்றிக் கூறியவர்களும் - அந்தப் பட்டத்தைச் சூட்டியவர்களும் யார்? ஏன்? எதற்காக? எப்போது? எந்தச் சமயத்தில்? எத்தன்மையில் கூறினார்கள் என்ற பிரச்சினை எழவில்லை! அதனை நம்புகிறீர்கள். சொன்னவனைப் பற்றி நீங்கள் அறிய மாட்டீர்கள். இப்போது அவன் உங்கள் எதிரே வர மாட்டான். வர இயலாது. காரணம் அவனுக்குத் தெரியும்-அவள் பெண்மையைக் கெடுத்தது யாரென்று. அப்படியெல்லாம் சொல்லி மறையும் சூது மதியினரின் சொல் உங்களுக்கு உறுதுணையாகிறது - நேரிடையாக நான் கூறும் வார்த்தையை மறுக்கிறீர்கள்.

“வளர்த்த விரும்ப வில்லை”

“அதையே தான் நானும் சொல்ல விரும்புகிறேன்”

“வருகிறேன்” என்று சொல்லி விட்டுப் போலீசார் சென்று விட்டனர். ஹோட்டலிலுள்ள பலரும் பலவாறாகப் பேசிக் கொண்டனர். ஹோட்டலை விட்டு வெளியேறி வந்தவுடன் “உன்வீடு எங்கே இருக்கிறது” என்று கேட்டார் அவர். அந்தக் கேள்விக்குத் தன் வீடு இருக்குமிடத்தைச் சுட்டிக் காட்டினாள். அவள் முன்னே செல்ல அவர் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். அவள் தன் மனதிற்குள்ளாக:

“அட உலகமே! இது தானா பெருந் தன்மை! ஏதோ பெரிய மனிதர்! மனித குலம் சாதிக்கத் தவறியதைச் சந்தர்ப்பத்தில் சாதித்துக் காட்டியிருக்கிறார் என்று பெருமிதப்பட்டேனே! அவரும் கடைசியில் மிகச் சாதாரணர்கள் போலவே ஆகி விட்டாரே! எந்தவிதக் கைம்மாறும் கருதாது எனக்கு உதவிய உத்தமரென்று உள்ளத்தில் நினைத்துப் போற்றினேன். அவர் என் வீடு எங்கிருக்கின்றதென்று கேட்பவர்கள் பட்டியலிலேயல்லவா சேர்கிறார்”

என்று எண்ணிக் கொண்டே நடந்தாள்! சற்று முன் அய்யயோ ஆதரவில்லையே எனத் தவித்துக் கொண்டிருந்த அவள் இப்போது எடைபோட்டுப் பார்க்கின்ற அளவுக்கு வந்து விட்டாள். அவள் கூறுகிறாள் அட உலகமே! என்று. இத்தனைக்கும் இடையில் சமுதாயச் சிக்கல்களையும் செயல்களையும் எண்ணிய வாறே அந்த வழக்கறிஞர் சென்று கொண்டிருந்தார். ‘சமுதாயத்

தின் விசித்திரப் போக்கில் விழுந்து இழுத்துச் செல்லப்படும் விதியற்றவர்களைக் கரை சேர்க்க எத்தனையாண்டுகள் பிடிக்கும்' என்பதிலே அவர் நாட்டம் படிந்திருந்தது. ஆகவே தலையைக் கவிழ்த்த வண்ணம் சிந்தனையுடன் சென்று கொண்டிருந்தார். சற்றுப் பொறுத்து, தன்னைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த அவள் வரவில்லை என்பதையறிந்து பின்னே திரும்பிப் பார்த்தார். அவளோ அங்கே நின்று கொண்டிருந்தாள். "ஏன் நிற்கிறாய்" வா! என்று அவர் கூப்பிட்ட குரலும் கூட அவளுக்கு ஏளனமாகத் தான் பட்டது. எனினும் பின் தொடர்ந்தாள். வீட்டைச் சென்றடைவதற்குள், வழியிலே கண்ட அவள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களெல்லாங் கூட அவ்ள் ஏதோ அதிர்ஷ்டத்தை உடன் கூட்டிச் செல்வதாகவே பேசிக் கொண்டு சென்றனர்.

வீட்டைச் சென்றடைந்ததும் வழக்கறிஞர் வீட்டின் உட்புறத் தோற்றங்களைக் கண்டார். எத்துணையோ வரலாறுகள் கூறிற்று அங்கு வாளாநின்ற சுவர்களும்-பரம்பரைப் பாயும்-பரந்து கிடந்த குப்பை கூழங்களும். அவற்றின் நடுவே அலங்கரிக்கப்பட்டுத் தோற்றமளிக்கும் படுக்கை இடங்களும் தோற்றமளித்தன. இவற்றுடன் எங்கோஒருமூலையில் கிடந்த ஒரு நிழற் படத்தை எடுத்து "இது யாருடையது" என்றார், "என்னுடைய படந்தான்" என்றாள் அவள். அவளது பழங்காலத்துச் சுவடு - எழிலரசியாய்-இளமைததும்ப - அழகோவியமாக அமைந்துள்ள அந்தப் படத்தின் கீழே "கமலம்" என்று தாமரை முகத்தின் விளக்கவுரை தீட்டியிருப்பது போலக்குறிப்பிடப்பட்டிருந்தது. "உம்! புறப்படு" என்றார் மிகத் தடித்த குரலில்.

"எங்கே!"

"என் வீட்டிற்கு"

"வேண்டாம்! இங்கேயே இருந்துவிடலாம்! இனியும் வெளிச் சென்றால் ஆபத்து அதிகமாகும்."

என்று வழக்கமான குரலில் கூறினாள் அவள். அவர் அதை மறுத்து மீண்டும் 'புறப்படு' என்று கூறியவுடனே அச்சம் உந்தித்தள்ள, வெளிக்கிளம்ப ஆயத்தமானாள். "இந்த வீட்டில் நீ காலடி வைப்பது இதுதான் கடைசி முறை" என்று அவர் கூறிய போது, அந்தச் சொல்லுக்குப் பொருள் விளங்காமல் திகைத்தாள், "வீட்டைக் காலிசெய்" என்று மீண்டும் அவர் கூறிய போதுதான் அவளுக்குப் புரிந்தது—ஆகவே "நானிங்கிருந்து புறப்படுவதானால் சுற்றுப் புறங்களிலுள்ள கடன்களைத் தீர்க்கவேண்டும்" என்றாள். எல்லாவற்றையும் மொத்தமாக அவள் குடியிருந்த வீட்டுக்காரனைக் கூப்பிட்டு அவனிடம் கொடுத்தார். அவன் போட்ட கூழைக் கும்பிடையும்-பணம் பெறும் பாவனையையும் கண்ட போது "எவ்வளவு உயர்ந்தவன் போல் வேடமணிந்திருக்கிறான். இவர்களுக்கு இடங் கொடுத்து, அவர்களுடையும் இழிவையும் பழியையும் சுமந்து வரும் பணத்தைக்கொண்டு பகட்டித் திரிகிறானே இவனுக்குப்பெயர் பெரிய மனிதன்" என்று எண்ணியவாறே அங்கிருந்து புறப்பட்டனர்.

நேராக வழக்கறிஞர் வீட்டைச் சென்றடைந்தபோது அங்கு வேறுயாருமே இல்லை! அவளை அழைத்துச் சென்று வீட்டின் உட்புறங்களையெல்லாம் காண்பித்து அங்கு அவள் வாழலாம் என்ற அனுமதியும் வழங்கினார். புதுவாழ்க்கையில் புகுந்த கமலம் புதுமுறையும் புதுத்தன்மையும் பொருந்தி இருக்கலானாள். இவ்வளவு இளமைப் போதிலேயே மனைவியை இழந்துவாழும் அவருடைய நேர்மையில் அவள் மனம்பற்றியது. என்றாலும் இப்போதுள்ள அவளது நிலையிலிருந்து தன் பழைய நிலையை எண்ணிப்பார்த்த போது நாணத்தால் தாக்குண்டாள். ஒருநாள் அவர்வழக்கு மன்றத்திலிருந்து திரும்பி வருவதற்குள் தான்வெளியே சென்றுவரலாமெனக் கருதிச் சென்றிருந்தாள். ஆனால் எண்ணியபடி குறித்த காலஅளவில் திரும்பிவந்துவிட முடியவில்லை. அதற்குள் வீடுதிரும்பிவிட்ட அவர் அவள் வருகையை எதிர்பார்த்திருந்தார். அவள் வந்ததும்—

"எங்கே போயிருந்தாய் கமலம்"

"பழைய சிநேகிதி ஒருத்தியைக் காணவேண்டுமென்று ஆசை! அங்கே போய்வந்தேன்"

"கமலா! உன் ஆசையை நான் மறுக்கவில்லை! ஆனாலும் மக்களின் மனப்போக்கை அறிந்துகொள்ள இன்னும் உனக்குத் தன்மை போதாது. நீ விரும்புகிறாய் நட்பின் சிறப்பை! ஆனால் உன்னைக் கண்டபோது அவர்களுக்குப் பொறாமைதான் ஏற்படுமே தவிர, உன்உயர்ந்த நிலைகண்டு பெருமைப் படமாட்டார்கள்! இவளுக்கா இத்தகைய வாழ்வு என்று எண்ணமிடத் தலைப்பட்டு விட்டார்களேயானால் உன்னுடைய ஒவ்வொரு நடைமுறைகளிலும் அவர்களுக்குப் பகைமை எண்ணந்தான் அதிகரிக்கும். அதன் பயனால்உனக்குத் தொல்லைகள்வந்துநிற்கும். ஆகவே இனியும் அப்படி நடந்து கொள்ளாதே! இதனை நான் கூறுவதால் நீ வெளியே செல்வதை நான் விரும்பவில்லை என்பதல்ல பொருள். வெளியே சென்றால் வேதனையின் வரவு அதிக மாகும் என்பதைத்தான் குறிப்பிடுகிறேன்"

"இனி அவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன்"

என்று கூறி உள்ளே சென்று விட்டாள். அவரது போக்கு, புத்தி மதிகள் யாவும் அவளிடம் காதலாக உருப்பெற்றது, என்றாலும் "தானெங்கே அவரெங்கே, கெட்டழிந்தவள், மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவள்- ஆதரவற்ற அநாதை அப்படிப் பட்டவளுக்கு வாழ்வளித்தார். அவரை நான் காதலிக்கிறேனென்றால் என்ன எண்ணுவார்" எனக் கருதி உள்ளுக்குள்ளேயே தன் காதலை வளர்த்து வந்தாள். அதன் பயனாய் அவர் நலத்தில் நாட்டமுடனிருந்தாள். அவரும் அப்படித் தானிருந்தார். "போதிய எழில் - நடுத்தர வயது-கட்டு உடல்! இவ்வளவும் பொருந்தி இருக்கிறாள். என்றாலும் சமுதாயத் திமிரால் சாய்க்கப் பட்டுவிட்டாள். நான்தான் அவளைக் காப்பாற்றினேன். அப்படிப்பட்ட நானே அவள் பெண்மையில் உரிமை கொண்டாடினேனென்றால் என்னைப் பற்றி அவள் என்ன நினைப்பாள்" இவ்வாறு நினைத்த அவர் அவள் செயலிலும் நடை முறைகளிலும் புதுமை கண்டு மகிழ்ந்திருந்தார். இத்தகைய இரண்டுள்ளங்களும் ஒத்திருந்ததினால் அவர்களிடையே அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தது.

ஒருநாள்! வழக்கொன்று அவரை நாடி வந்தது. அந்த வழக்கை விசாரிப்பதற்காகத் தான் ஈடுபடுவதன் முன், வழக்காடுவதற்காக வந்து நிற்போரின் வாழ்வைப்பற்றிய பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவருக்கு அது இயல்பு என்பது அந்த ஊர் முழுவதும் அறிந்த செய்தி! வழக்கறஞராய் இருப்பதிலும் தான் அறிவறிந்த பருவமுதல் ஒருவரையறை செய்துகொண்டே தன்வளர்ச்சியை ஏற்படுத்திவந்தவர் அவர். அதனால் உடல்வளம் - வலிவு- வனப்பு அத்துடன் கல்வித்தேர்வு யாவும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தார். யாவற்றிலும் தான் கருதியதைப் பெற்றிருந்த அவருக்கு வாழ்க்கையிலே பொய்த்துப்போனது மனை
யின் பிரிவுதான். தற்போ
அந்தக் குறையும் நீங்கி க
லத்தோடு வாழ்ந்து வந்தார்
அவளோடு இல்லற இன்ப
நுகரவில்லை யெனினும் அ
வகையிலும் அவர் இலட்சி
எண்ணம் குறைவுபட்டுப்போ
வில்லை! ஆகவே முழு நிறை
பெற்றே திகழ்ந்தார்.

எந்தவழக்காக இருந்தாலு
அதனைத் தொழில் துறைய
கக் கருதுவதில்லை! "எல்லே
ரும் அவ்விதம் நடந்துகொள்ள
முடியாது! முடிந்த ஓரிரு
ராவது தன்னைப்போ
தோன்றவேண்டும்" என்பதே
அவர்கருத்து. அதில் தவறு
செயலாற்றுவதுதான் அவ
வழக்கம். வழக்கறிஞராயிரு
பதுடன் துப்பறிவதும், வ
லடி எதிர் வழக்காடுவே
ராயின் நேரில் சென்று முடி
துவைக்கின்ற துணிவும், எதி
தால் எதிர்க்கும் ஆற்றலு
பெற்றவர். அவரது நண்ப
கள் பலர் "நீ வழக்கறிஞன
இருப்பதைவிட போலீசு அ
காரியாகச் சென்றால் மிகவு
நலன் விளையுமே" என்பா
அதற்கவர் "போலீசு அலுவ
லில் குற்றவாளியான ஒரு சா
பைத்தான் காணமுடியுமே
தவிர, உண்மைக் குற்
வாளி யாரென்றுகாணும் வா
பும், உண்மைக்குற்றவாளிக்கு
தண்டனையின் இன்றியமைய
மையும் ஏற்படுத்த இயலாது
என்று கூறுவது வழக்கம்.

தற்போது அவரிடம் வ
துள்ள வழக்கு மிகவும் பயங்க
மானது. அரசியல் துறை அ
காரிகள் பலர் சேர்ந்து ஒருதன்
நபரைக் குற்றத்துக்கு இல
காக்கி - கற்பனைவழக்கு ஏ
படுத்தி, அதன்காரணமா
அந்த நபரை அந்தமானுக்
அனுப்பியிருப்பதுபற்றிய வழ
க்கு. அந்தமானுக்குச் சென்
ருப்பவரின் குடும்பத்தில் எஞ்
யிருப்போர்கள் வழக்கறிஞ
யடுத்தனர். அவர்கள் வழ
கைக் கேட்டு வழக்காட
செல்லுமுன் அவர்களுக்குத்
தன் வீட்டில் இருக்கை த
தார்.

அவருக்குத்தெரியும் அவ
களையும் அந்த வழக்கையு

புதிய டிரைவரைக் கூப்பிட்டு "அதோ அந்தசிகப்பு விளக்கைத் தாண்டி வண்டியைத் திருப்பி வா!" என்று முதலாளி அனுப்பினார். டிரைவர் காரை ஓட்டிக்கொண்டு போனான். வீட்டினுள் வந்து, முதலாளி காத்துக்கொண்டிருந்தார். ஐந்து நிமிடம், பத்து நிமிடம், ஒரு மணி நேரம், கார் திரும்பிவரவில்லை.

மறுநாள் காலை டிரைவர் முன் வந்து நின்றான்.

"ஏன் இவ்வளவு நேரம்?"

"நேற்று இரவு ஒரு சிகப்பு விளக்கைத் தாண்டி வரச் சொன்னீர்களல்லவா?"

"ஆமாம்!"

"அந்த விளக்கு ஒரு காருக்குப் பின்னாலிருந்த சிகப்பு விளக்கு! நாற்பது மைல் போனபின்தான் அது நின்றது. அதற்குப்பின் அதைத் தாண்டிவர, இவ்வளவு நேரம் பிடித்தது."

ான் ஏற்றுக்கொள்ளுகின்ற
பாத எத்தனைவகை இன்
லும் அல்லலும் நேரு
மன்று. ஆகவே நிகழ்வதைப்
ற்றிய எந்தவிதக் கலக்கமும்
யர்வும் கொள்ளாமலேயே
வர்களின் பொறுப்பை மேற்
காண்டார்.

அந்தவழக்குபற்றிய விவரங்
ளைக் கேட்டறிந்துவர, தான்
ந்தமான் செல்வதாக இருந்
ார். தங்களைப்பற்றிய
ழக்கு, குறிப்பிட்ட வழக்
றிஞரிடம் சென்றிருப்பதை
ணர்ந்த அந்தவழக்கில் சம்
ந்தப் பட்டவர்கள் மிகவும்
லக்கம் கொண்டனர். ஆத
ால் எப்படியும் அவர்கைப்
ட வழக்கு நடைபெறாமலிருப்
தற்குவேண்டிய முயற்சிகள்
லவற்றைச் செய்துவந்தனர்.
வ்வழக்கு சம்பந்தமாக
ந்தமான் செல்ல இருந்த
வர், 'மற்றவர்கள் தனக்கு
ாதேனும் கேடுசெய்யக்கூடும்'
ன்பதை உணர்ந்து, அந்த
ானில் கைதாகி இருக்கும் நப
ன் தம்பியை தன்னையொப்ப
வடம் அணிவித்து அனுப்பி
ிட்டுத் தான் வீட்டுக் காவல்
ாரன் போல வேடமிட்டுக்
காண்டு வீட்டிலேயே
ிருந்துவிட்டார். அவர் வேட
ாரியாக அங்கே இருப்பது
மலத்திற்குக் கூடத் தெரி
ாது. தெரியக் கூடாதென்பது
ான் அவர் விருப்பம். ஆகவே
ான் புறப்பட்டுப்போவதாகக்
றியபோதே வீட்டுக்குக்
ாவலாக அமைக்கப் பட்டிருப்
வனைப்பற்றியும் அவனைப்பரா
ித்துக் கொள்ள வேண்டிய
றைகளையும் தெரிவித்துச்
சென்றார். அதனால் வீட்டிலி
ருப்பவன் ஒரு காவல் கார
னென்றே அவள் நம்புகின்ற
கையில் அவரது நடிப்பும்
ிருந்தது. அவர் எண்ணியது
பாலவே அங்குள்ள நடை
றைகள் நிகழ்ந்து கொண்டி
ருந்தன. அதாவது: அவர்
ந்தமானுக்குப் போய் விட்
ாரென்ற எண்ணத்துடன்,
வர் வீட்டிலுள்ள வழக்கு
ம்பந்தப் பட்ட குறிப்பு முத
ிய வற்றைக் கைப் பற்றவும்-
யல வில்லை யானால் அழித்
தாழிக்கவும் தலைப்பட்டனர்.
தற்கு அவர்களுக்கு சாதக
ாக இருந்தது கமலா அந்த
ட்டில் இருந்தாள் என்பது
ான். கமலாவின் பழைய
லையை அடிப்படையாகக்
காண்டு அவளுக்குத் தோழி
ாக உள்ளவளை அந்த வீட்
ற்கு அனுப்பி, அதன் மூலம்
திகாரிகள் அங்கு நுழைய
கை செய்து கொண்டனர்.
வற்றிற்கு மறுப்புத்தர
ங்கே ஓர் முகமதியன் போலி
ந்து காவல் காரனென்ற
பயர் பூண்டிருக்கும் வழக்கறி
ஞர் தடையாக இருந்தார்.
தாழியின் மூலம் அங்கே
ங்கெந்த இடத்தில் என்
னென்ன இருக்கிறதென்பதை
றிந்து வர ஏற்பாடு செய்த
ார். அந்தச் செய்தியை யறிந்து
காண்ட பின்னர் தாங்க
ங்கே சென்று வழக்கு சம்

பந்தப் பட்ட எழுத்து மூலங்களைக் கைப்பற்றி வரலாம் என்பது அவர்களுடைய திட்டம். இதை அவள் தோழியர்கள் வந்துபோனதுமே வழக்கறிஞர் கண்டு கொண்டார். உடனே கமலாவை அழைத்து நடைபெறப் போவதை விளக்கிக் கூறினார்.

"நட்புக்குரிய தோழி என்று கூறிப் பார்க்கச் சென்றிருந்தாயே! அவள்தானே இவள். இவளேன் இப்போது இங்கே வந்தாள் தெரியுமா? இங்குள்ள வழக்கு சம்பந்தப்பட்டவைகளைக் கைப்பற்றிப்போகக் கையாளாக அனுப்பப்பட்டிருக்கிறாள்!"

"அதெல்லாமில்லை! அவளென் உயிர்த்தோழி. உனக்கெப்படி அவளைப்பற்றித் தெரியும். அவர் இருந்திருந்தால் அவளது நடைமுறைகளைக்கண்டு அவளது மனப்போக்கைப் புரிந்துகொள்வார். உனக்கு காவல்காரனுக்கு உரிய அளவு கற்பனைதானே இருக்கும்!"

"அப்படி எண்ணவேண்டாம்! நான் கற்றவனில்லையாயினும கற்றறிந்த அவருடன் பலநாள் பழகி இருக்கிறேன். கம்பன் வீட்டுக்கடுத்தறியும் கவிபாடும்" என்று கூறக்கேள்விப்பட்டதில்லை! அதேபோல் அவருடன் அதிகம் பழகிப் பழகி அந்தவழக்குத்துறையில் ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்கிறேன். ஊரிலுள்ளோர் என்னை ஒரு குட்டிவக்கீலென்றே கூறுவர்"

"ஊரார்கள் கூறுவதை உன்வரையில் நீ முடிவு செய்திருக்கிறாய்! அதனால்தான் இதுசம்பந்தப்பட்ட வகையில் திடீர்முடிவுக்கு வந்துவிட்டாய். அப்படிச் செய்வது தவறாகும்"

"ஊரார் பேச்சையும் முடிவையும் அவ்வளவு எளிதாக எண்ணிவிடக்கூடாது! ஊர்ப் பேச்சின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய உண்மைகள், அகப்பட்டிருக்கின்ற பழங் குற்றவாளிகள் அநேகர் அநேக விதத்தில். ஆதனால் தனக்குச் சாதகமானவைகளில் மட்டும் ஊரார் பேச்சை உயர்வாக எடுத்துக்கொண்டு சாதகமல்லாதனவற்றைத் தாழ்த்துவதும் நீக்குவதும் தவறாகும். இப்போது நான் அதுபற்றி விளக்கம் கூறினால் ஏற்றுக் கொள்ள முடியாதுதான் ஆனால் போகப் போகப் புரியும்"

"எனக்கு எல்லாம் புரியும்! நீ ஏன் இவ்வாறு கூறுகிறாய் என்பதும், அதற்குக்காரணமாயிருந்தது எது என்பதும் புரியும். வாழ்க்கையில் தவறிவிட்டவள் எவ்வளவு திருந்தி இருந்தாலும் உலகம் அவளைப் பற்றிய ஒருசார்புக் கண்ணோட்டத்துடனேயேதானிருக்கும். அதில் நீ மட்டும் எப்படி விதிவிலக்காகிவிட முடியும்."

"தவறு! நான் விதிவிலக்கானவன்தான். உலகம் செய்கின்ற ஒருசார்பு முடிவுக்கு இடங் கொடுக்கலாகாது என்பதைத்தான் கூறுகிறேன். 'எத்தனைதான் உயர்வுற்றாலும் கெட்டவர்கள் திருந்த முடியாது' என்பதுதான் உலகம் வகுத்துள்ள நியதி. அதற்கு இலக்காகிவிடக்கூடாது. நடைபெறப் போவதைக்கண்டால் அப்போது என் சொல்லின் உண்மை புலப்படும்"

என்று கூறியதைக் கேட்டுக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். அதிகாரிகள் செய்துள்ள ஏற்பாட்டின்படி இரவில் கமலத்தின் தோழி வந்ததும் அவளைத் தனியாக அங்கே ஓர் அறையைக் காட்டி "அம்மா, வெளியே போயிருக்காங்க, வர்றவரைக்கும்உங்களை இந்த அறையிலே இருக்கச் சொன்னாங்க" என்று உட்கார வைத்து அந்தப் பக்கத்துக்குச் செல்லுகின்ற வழியிலிருக்கும் கதவைப் பூட்டிவிட்டார். முறையே அதிகாரிகள் தொடர்ந்து வந்தனர். வந்ததும் வாசலில் சேகவனாக நிற்கும் வழக்கறிஞர் அவர்களை வரவேற்று:

"வாருங்கள்! என்ன வேண்டும்! அய்யா ஊரிலில்லை. வெளியூர் சென்றிருக்கிறார்"

"அது எங்களுக்குத் தெரியும். இந்த வீட்டில் விபசாரம் நடை பெறுகிறது. அதைப் பிடிக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்"

"அப்படியா! வாருங்கள் உள்ளே சென்று பாருங்கள்!"

என்றதும் அதிகாரியும் அவருடன் ஒருநால்வரும் உள் நுழைந்தனர். அப்போது காவல் காரன் தடுத்து "சோதனைக்கு வந்திருப்பது தாங்களும் (மற்றும் இருவரைக் காட்டி) இவர்களும்தானே! அநாவசியமானவர்கள் ஏன்? வீட்டினுள் இருந்தவர்கள் என்று வழக்குகோர்வை செய்யவா?"

"அவர்கள் சர்க்கார் மேலதிகாரிகள்"

"அவர்கள் நுழைய அவசியமில்லை! தாங்கள் மட்டும் செல்லலாம்" என்று கூறி அனுப்பிவைத்தார். உள்ளே சென்றவருக்கு விவர மேதும் தெரியாத காரணத்தால், சென்று பார்த்துத் திரும்பினார்கள். அவர்கள் திரும்பிவந்ததும், காவலாளி வாசலில்நின்றிருந்தவர்களின் பெயர்களைக் கேட்டுக் குறிப் பெடுத்தார். அவர்கள் கூற மறுத்தபோது அவர்கள் மறுத்ததையும் குறித்துக் கொண்டு, அவர்களிடம் தென்பட்ட வெளிப்படையான அடையாளங்கள் சில வற்றைக் குறித்துக் கொண்டார். அதில் கையொப்பமும் அதிகாரியிடம் பெற்றுக் கொண்டார். அவர் மறுத்தபோது இந்த வீட்டைச் சோதனை செய்ய எவ்வித அத்தாட்சிப் பத்திரமுமின்றி உங்களை அனுமதித்ததுபோல் வெளியே செல்ல அனுமதிக்க முடியாது. நீங்கள் உள்ளே சென்றபோது தடுக்க எனக்கு உரிமையில்லை. ஆனால் "வீட்டைச் சோதனை செய்ய எந்தவித அத்தாட்சிப் பத்திரமுமின்றி உங்களை அனுமதித்ததுபோல் வெளியே செல்ல அனுமதிக்க முடியாது. நீங்கள் உள்ளே சென்றபோது தடுக்க எனக்கு உரிமையில்லை. ஆனால் 'வீட்டைச் சோதனையிட்டேன்' என்று எழுதித்தரமறுக்க உங்களுக்கு உரிமை கிடையாது. சோதனை செய்தீர்களல்லவா, அது உண்மைதானே, பின் ஏன் தயங்க வேண்டும். இல்லையேல் இங்கேயே இருங்கள். நீதி பதியை வரவழைக்கிறேன் அவர் முன்னதாக உங்களை அனுப்பி விடுகிறேன்." என்று கூறினார். நிலைமையைச் சமாளிக்க முடியாமலும் உதறித் தள்ள முடியாமலும் கையொப்ப மிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கமலத்தை அழைத்து "சிநேகிதி இங்கு மிக நல்ல எண்ணத்துடன் வந்தவள் எனக் கூறியதன் பயனைக் கண் முன்னே காணலாம். இதோ இந்த வீட்டைச் சோதனையிட வந்தவர்களின் எண்ணிக்கையும் கையொப்பமும். அவர்கள் ஏன்சோதனையிட வந்தார்களாம் தெரியுமா? இங்கே வியபசாரம் நடைபெறுவதாகச் சந்தேகப் பட்டார்களாம். அதை நிரூபிக்கவே உன் தோழியையும் அனிப்பி வைத்தார்கள்."

"அவள் வரவில்லையே"

"வந்தாள்! நான் உள்ளே அனுப்பவில்லை. அனுப்பியிருந்தால் வந்தவர்களின் எண்ணம் சுலபத்தில் நிறைவேறி விடும்"

"அப்படியெல்லாம்! நடைபெறாது! நீயாக எதைஎதையோ கற்பனைசெய்து கொண்டால் யார் பொறுப்பாளி"

"அப்படியா! அதையும் நிரூபிக்கிறேன். அதோ அந்த அறையில் உன்தோழி இருக்கிறாள். அவளிடம்நீ வெளியில் சென்றிருப்பதாகவும் வரும் வரை இங்கேயே இருக்கச் சொன்னதாகவும் சொல்லி அந்த அறையில் இருக்கவைத்திருக்கிறேன். ஆகவே அவளுக்கு இங்கு நடைபெற்றவைகள் தெரியாது. நீ அவளை அழைத்துச் செல்! சிறிது நேரத்தில் நான் வந்து சேருகிறேன்" எனக்கூறி அவள் தோழியை அடைத்துவைத்திருந்த அறையைச் சுட்டிக் காட்டினார். அவளும் அவ்வாறே அழைத்துச் சென்றாள். தற்போது அவளுள்ளம் தத்தளித்துக்கொண்டே இருந்தது. முதலில் உயிர்த்தோழியாக எண்ணியிருந்த அவளைப்பற்றிக் காவல்காரன் கூறிய செய்திபற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இருவரும் வீட்டினுள் சென்ற சிறிது நேரத்திலெல்லாம் போலீசு அதிகாரி ஒருவர் நுழைந்தார். அவர் வீட்டினுள் சென்றவுடன், வந்திருந்த கமலத்தின்

தோழி "அய்யா என்னை ஒன்றும் செய்யாதீர்கள். எனக்கு ஒன்றுமே தெரியாது. இவள் தான் இங்கு வரச்சொன்னாள். யார்யாரோவரப்போவதாகவும், வந்தால் நிறையப்பணம் கிடைக்கும் என்றும் கூறினாள்." என்று வந்தவள் கூறினாள். அதற்குப் போலீசு அதிகாரி "அப்படியா செய்தி இவளை உனக்கெப்படிப் பழக்கம்"

"இவளும் எங்கள் தொழிலைத் தான் செய்துகொண்டிருந்தாள்! இவள் மேல் ஆசைப்பட்டு இந்த வீட்டுக்கார வக்கீல் அழைத்துவந்துவிட்டார்"

"நீ என்ன சொல்லுகிறுயம்மா!"

"அவள் சொல்வது பொய்! நான் கெட்டழிந்திருந்தது உண்மை! என்னை ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்றிய அவர் இங்கே அழைத்து வந்துவிட்டார்."

"இங்கு வந்து இந்தத்தொழிலின் வருமானத்தையும், அவருக்குக் கொடுக்கிறுய். இன்பமும் பொருளும் எளிதாய் கிடைக்கிறதே என்று உன்னை இங்கு இருக்க வைத்திருக்கிறுர் அப்படித்தானே"

"கிடையவே கிடையாது! அவரென்னைத் தீண்டியது கூடக் கிடையாது. வீணுகப் பழி சுமத்தாதீர்கள்"

"எப்படி நம்புவது! இந்தப் பெண்ணே இங்கே அதிகப் பணம் கிடைக்குமென்று வந்ததாகவும் அடிக்கடி வருவதாகவும் சொல்லுகிறுள்."

"அதை நம்பாதீர்கள். அவளென் தோழி என்பது உண்மை! மற்றவை அத்தனையும் பொய்"

"பொய்யோ-மெய்யோ-யாவும் ஸ்டேஷனில் வந்து பேசிக்கொள்ளுங்கள். உம்-நடவுங்கள்"

"அய்யா! மானங்கெட்ட என்னை மானத்தோடு வாழ வைத்த அவருக்கு மாசு உண்டாகும்படி நான் நடந்துவிட்டேன்! இப்போது தாங்கள் என்னை இங்கிருந்து பிடித்துச் சென்றுல், நானே ஊரெல்லாம் அவர் பெயர் பழித்துத் தூற்றப்படும். இந்தப் பாவியால் அவருக்கு அந்த நிலை வர வேண்டாம். நான் ஒரு குற்றமும் செய்தறியேன். அவர் சொல்லைக் கேளாமல் இவளின் நட்டுறவை நீட்டித்துக்கொண்டதால் வந்த விளைவு இது. இம்முறை விட்டுவிடுங்கள். இனி எந்தவிதத் தவறுமின்றி நடந்துகொள்ளுகிறேன்."

என்று அவள் கூறிக்கொண்டு வரும்போது அவளது நிலையை எண்ணிய அவர் கண்களில் நீர் நிறைந்தது.

"பயனில்லை! புறப்படுங்கள்" என்னும்போது, எந்தவிதக் கவலையும் கலக்கமுமில்லாமல் களிப்புடன் வந்துகொண்டிருந்த கமலத்தின் தோழி, அரண்மனையும் அரசபோகமும் அதிக நாளைக்கு நிலைக்காது! ஒரு அளவுக்குத்தான் இருக்கும்" என்று கூறிக்கொண்டு வந்தாள்.

முன்னே நடந்துவந்த போலீசு அதிகாரி கமலத்தின் தோழியைக் கூப்பிட்டு, "ஏனம்மா இந்த அறையில் தானே நீ இருந்தாய்!" என்று அவள் முதலில் தங்கி இருந்த இடத்தைக் காட்டினார். "ஆமாம்! அவள் வெளியே போயிருக்கும் சமயம் நான் வீட்டிற்குள் போகவேண்டாமென்பதற்காக வேலைக்காரனிடம் சொல்லி என்னை அங்கே இருக்க வைத்திருந்தாள். பிறகு ஆட்களுக்கெல்லாம் சொல்லியனுப்பிவிட்டு என்னை வந்து அழைத்துச்சென்றுள்."

"நீ சென்றுய்! அப்படித்தானே! சரி நீ உன் வீட்டிற்குச் செல்! சற்று பொறுத்து அங்கு வந்து உன்னை விசாரித்துக் கொள்கிறேன்" என்று கூறி அனுப்பிவிட்டு "இப்போது உணர்ந்து கொண்டாயா? உன் தோழியின் உன்னத மனப்பான்மையை"

"நீயா இந்த வேஷத்துடன் இருக்கிறுய்" என்று வந்திருப்பது காவல்காரன்தான் என உணர்ந்து நன்றியும் களிப்பும் பொருந்த மூறுவலித்தாள். அதுவரையிலும் அவள் தன்னைத் தெரிந்துகொள்ளவில்லை என்பதை யுணர்ந்து அவர் மகிழ்ந்தார்.

"தோழியின் நட்பும் துணையும் உயர்ந்தது என்றுயே! பார்த்தாயா அவளது மனப்போக்கை! அவள் உன் வாழ்வு பற்றிக் கூறிய உவமையைக் கண்டுகொண்டாயல்லவா? இதுபோலத்தான் வாழ்க்கையில் ஏற்பட்டுவிடும். தடுக்கி விழச்செய்யும் தன்மையுள்ளவர்களின் முயற்சிதான் பலரது வீழ்ச்சிக்கு அடிப்படை"

"இப்போது உணர்ந்து கொண்டேன். காவல் காரனுகவே இருந்து கொண்டு உன் கருத்திலே இவ்வளவு வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறுய்; நானவரை அண்டியிருந்தும் எனக்கந்தத் தெளிவு ஏற்படவில்லை"

"அதை எண்ணிப் பயனில்லை. என்றேனும் ஒருநாள் அந்தத் தன்மை வந்தேதீரும் மேலும் பல துன்பங்களுக்குப் பிறகுதான் இத்தகைய அரிய உண்மைகளைக் காண முடியும்" சென்று அமைதியாக இரு! இது ஒன்றும் குறைப்படவோ - குற்றமெனக் கருதவோ உரியதல்ல! யாரும் எண்ணக் கூடியது தான். அதிலே உன் எண்ணம் மிக மிகச் சாதாரணம்" எனக் கூறி அவளை அனுப்பி வைத்தார். உடனே நீதிபதியிடம் சென்று தன் வேடத்தின் முக்கியத்தையும் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் சொல்லிவிட்டு, அடுத்து நடைபெறப் போவதாகத் தான் எதிர் பார்க்கின்ற நிகழ்ச்சிகளுக்கு, தனக்குச் சாட்சியாகத் தன் வீட்டிற்கு அவர் வரவேண்டுமென்றும் கூறி அழைத்து வந்து விட்டார். அழைத்து வந்த வகை வீண் போகவில்லை. வீட்டிலிருந்துசென்ற அதிகாரிகள் தங்கள் முதல் தோல்வியின் பயனுல் அடுத்த முயற்சியில் வேகமாக ஈடுபட்டனர்.

மறு இரவே அவர் வீட்டையடைந்து 'அந்த மானுக்குச் சென்றிருக்கும் அவர் அங்கு இருந்தவாறே சில குறிப்புகளை ஆராயச் சொல்லியிருக்கிறுர்' என்று கூறி ஒரு சிலர் வந்தனர். அப்போது அங்கிருந்த காவல் காரனையும் பெரியவரையும் கண்டு அவர் யாரென்று கேட்டனர். அவர் வெளியூரிலிருந்து வந்திருக்கும் அவரது உறவினர் என்று கூறினுர் காவல் காரன் வடிவத்திலிருப்பவர். அதன் பிறகு அவர்கள் இயல்பாகவே தயாரித்து வந்திருக்கும் திறவு கோல்களின் உதவியால் அங்குள்ள பீரோவைத் திறந்து வழக்கு சம்பந்தப் பட்ட தகவல்கள் இருக்குமென எண்ணிய சில குறிப்புகளைப் பார்த்தனர். அங்கு எதுவுமில்லை யாதலால் ஏமாற்றமடைந்தனர். அப்போது அங்கிருந்த காவல்காரன் அவர் வழக்கு பற்றிய குறிப்புகள் எதையும் அங்கு வைப்பதில்லையே! என்று கூறிவிட்டு மற்றொரு நிலவறையைக் காட்டி இங்கேதான் வைப்பார். அப்படி எண்ணியிருக்க மாட்டீர்கள் அல்லது அது உங்களுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்காது என்று இரு பொருள் படக் (ஒன்று அவர்கள் கூறியபடி "கடிதம் எழுதித் தெரிவித்தார்" என்பதில் இல்லை என்பது போலவும்-மற்றொன்று வீட்டில் வந்து கமலத்திடம் கேட்டபோது அவள் தெரிவித்திருக்க முடியாதென்பதும்) கேட்டார். ஆமாமென்று தலையசைத்த அதிகாரி அதற்குத் திரவு கோலில்லையே என்று திகைக்கின்றபோது "அவருக்கே எழுதுங்களேன்! ஏன் உங்களிடம் தந்துள்ள திறவு கோல்களின் கோர்வைகளிலே இதற்குரிய திறவு கோலும் இணைக்கப் பட்டிருக்கலாமே" என்று கூறியவாறே தன்னிடமுள்ள திறவுகோல் கொத்து ஒன்றை எடுத்துக்காட்டி, நானறியாமல் அவர் ஒரு தனிக் கோர்வை வைத்திருந்தார் என்பதை இப்போதுதான் நான் அறிகிறேன் என்று சொல்லி அதனை வந்திருந்த அதிகாரிகளிடம் கொடுத்தார். அவர்கள் அதை ஆத்திரமாக வாங்கி நிலவறையைத் திறக்க முற்பட்டனர். அங்கேயே இடைமறித்து, "எந்தவழக்குப்பற்றிக் கேட்கிறீர்கள். அந்தமான் கைதியின் வழக்குப்பற்றித்தானே கேட்கிறீர்கள்" "ஆம்" என்றனர். அவையனைத்தையும் கையிலேயல்லவா கொண்டுபோயிருக்கிறுர் என்றுர். அப்போதே அவர்களின் திகைப்பு அதிகமாயிற்று. சமாளித்துக் கொண்டு வெளியேற முற்பட்டனர். காவல்காரர் அவர்களை விடாது நிறுத்திவைத்து, வந்திருக்கும் பெரியவரிடம் உங்கள் வரவின் வகையைக் கூறிச் செல்லுங்கள் என்று திருப்பினுர். அப்போது அவர்கள் எவ்வளவோ ஏமாற்றிச் செல்ல முயற்சித்தும் பயனின்றிப்போய்விட்டது. ஆகவே ஏதும் வழி வகையற்று வாளா இருந்தனர். பெரியவர் வடிவிலிருந்த நீதிபதி அவர்களிடம் முறையே வாக்குப்பதிவு செய்துகொண்டபின், தான்நீதிபதி என்பதையும் அவர்தான் வழக்கறிஞர் என்பதையும் விளக்கினுர். வந்தவர்கள் அயர்ந்தனர். மறைவில் நின்று கொண்டிருந்த கமலம் முன் நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணி மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றுள்.

உடனடியாக உத்திரவுகள் அனுப்பப்பட்டு முறைப்படி தண்டனையும் விடுதலையும் வழங்கப்பட்டது. அந்தமானிலிருந்து விடுதலையாகி வந்த கைதி வழக்கறிஞரை வந்து காணுகின்றபோது அவர் திடீர் நோயால் மரணப்படுக்கையில் இருந்து கொண்டிருந்தார். வந்தவர் தன் நன்றியைக் கூறிப் பலவாறு பாராட்டிப் புலம்பினுர். அவரோ எதையும் பொருட்படுத்தாமல் தன் கடமையை நிறைவேற்றிவிட்டதாகக் கருதியவராயிருந்தார். அப்போது அங்கு வந்த கமலத்தைக் கண்டதும் அனைவரும் அகன்று சென்றுவிட்டனர்.

அவள் கண்ணீரும் கம்பலையுமாக வந்தாள். ஏதோ சொல்ல வாயெடுத்தாள்-அவரும் அப்படியே தோற்றமளித்தார்; இருவர் வாயிலிருந்தும் ஒரே சமயத்தில் 'உங்களைக்காதலிக்கிறேன் உன்னை நேசிக்கிறேன்' என்ற சொற்கள் வெளிப் பட்டன. அடுத்து, வெளியிலிருந்த அந்தமான் சென்று திரும்பியவரின் தம்பியை அழைத்து "நான் உன் அண்ணனுக்கு வாழ்வளிப்பதன்மூலம் உங்கள் குடியை வாழ வைத்து விட்டேன். நீ இதோ இவளுக்கு வாழ்வளிக்க வேண்டும். என் சொத்துக்கள் அவள் பெயரிலேயே ஆக்கப் பட்டிருக்கின்றன. அதையும் ஏற்று நல்வாழ்வு வாழுங்கள்" என்று கூறிக் கண் மூடி விட்டார். எல்லோருக்கும் வாழ்வளித்த அவர் வாழ்வு அமைதியுற்றுவிட்டது. ஏனையர் வாழ்வு சிறப்புற்றது. ○

# தமிழில் தந்தி முறை!

—(0)—

[தமிழ், எல்லாத் துறைகளிலும், தமிழகத்தில் ஆட்சிமொழியாகக் காட்சி யளிக்கவேண்டும் என்ற வேட்கையுணர்வு, இதுநாளில் எங்கணும் பொங்கி எழுவதைப் பார்க்கிறோம். அந்தந்தத்துறையில் ஈடுபட்டுள்ள தமிழார்வம் மிக்க அன்பர்கள், அந்தந்தத்துறையில் பயன்படுத்துவதற்குரிய ஏற்ற கலைச்சொற்களைக் கண்டுபிடித்துக் கூறுவதில் தனி ஊக்கமும், உணர்ச்சியும், உழைப்பும் காட்டினுல்தான் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நீங்கா வேட்கை விரைவில் வெற்றி பெற வாய்ப்பு ஏற்படும். தந்தித் துறை தமிழை எப்படி ஆட்சிமொழியாக ஆக்கலாம் என்பதற்கான காரண காரிய விளக்கங்களைப் புதுவை அஞ்சலகத்தைச் சேர்ந்த நண்பர் அ. குப்புசாமி அவர்கள் இந்தக் கட்டுரையில் தெள்ளத் தெளிய ஆராய்ச்சி செய்து காட்டியுள்ளார்கள். எளிய, இனிய முறையில் அவர் விளக்கிக் காட்டியிருப்பது போற்றி மகிழ்வதற்குரியதோடு, எளிதில் பயிலுவதற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கிறது. நண்பர் குப்புசாமி அவர்களின் முயற்சி தந்தித் துறையில் ஈடுபட்டிருக்கும் மேலும் பலரின் சிந்தனையைக் கிளரவும், மேலும் எளிய புதிய முறையைக் கண்டுபிடிக்கும்படி அவர்களைத் தூண்டவும் பயன்படுவதாகும். தந்தித் துறையில் இருக்கும் தமிழார்வம் மிக்கவர்கள், இந்தக் கட்டுரையைப் பயன்படுத்திக்கொண்டு தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்றம் பயப்பார்களாக!

(ஆ–ர்.)

நம் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி ஆகிவிட்டது. இப்பொழுது, தமிழ் மொழியிலேயே தந்தி மூலம் செய்திகளைத் தெரிவிக்கவும், அறியவும், தாய்மொழி மட்டும் அறிந்த தமிழர்களுக்கும் உபயோகமுள்ள ஓர் முறையைக் காணவேண்டியது அவசியம்.

இம்முறையை ஆங்கில முறையைக் கொண்டு விளக்குவோமாயின் அது எளிதில் விளங்கும்.

இப்பொழுது செய்திகளை ஆங்கிலத்தில் தந்தி மூலம் செலுத்தப் பயன்படும் முறை மோர்ஸ் எழுத்தொலி முறையாகும். (Morse code) ஆங்கில மொழியிலுள்ள எழுத்துக்கள் இருபத்து ஆறு. மோர்ஸ் முறைப்படி ஒவ்வோர் எழுத்தும் குற்றொலி . (கட), நெட்டொலி—(கட்டு) என்னும் இருவேறுபட்ட ஒலிகளைத் தனித்தோ ஒன்றோடொன்று பலவாறு சேர்த்த ஒலிக்குறிக் குழுவிலோ குறிக்கப்படுகிறது. அவை பின் வருவன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a | .— | i | .— — — | s | . . . |
| b | —. . . | k | —.— | t | — |
| c | —.—. | l | .—. . | u. | .— |
| d | —. . | m | — — | v | . . .– |
| e | . | n | —, | w. | – – |
| f | . . – . | o | — — —· | x | –. . — |
| g | – – | p | . – –, | y | –. – – |
| h | . . . . | p | – – . – | z | — —. . |
| i | . . | r | .—. | | |

TAMIL என்னும் வார்த்தையைத் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டுமாயின் - .- -- .. .-.. என்னும் ஒலிக்குறிகள் செய்தியனுப்பும் தந்தி யலுவலகத்தினரால் (Sending Telegraph Office ) கம்பி மூலம் மின்சார சக்தியின் உதவியால் செலுத்தப்படுகின்றன. செய்தி போய்ச்சேரவேண்டிய இடத்திலுள்ளோர் (Receiving Telegraph Office) அங்குள்ள கருவியின் உதவியால் முன்னர் குறிக்கப்பட்டுள்ள ஒலிக்குறிகளைக் கேட்டு அவற்றிற்குரிய ஒலி வடிவங்களாகிய TAMIL என்னும் எழுத்துக்களை வரி வடிவில் எழுதுகிறார்கள். இவ்வாறு ஆங்கிலத்தில் செய்திகள் தந்தி மூலம் அனுப்பப்படுகின்றன.

தமிழிலோ உயிர்-12, மெய்-18 ஆய்தம்-1 உயிர் மெய்யெழுத்துக்கள் 216, ஆக–247 எழுத்துக்கள் உள்ளன. இவையன்றி வடமொழி மெய்யெழுத்துக்கள் 5, அவற்றின் சார்பெழுத்துக்கள் 60 ஆக 65 எழுத்துக்களும் தமிழ் மொழியில் வழங்குகின்றன. 26 எழுத்துக்களையுடைய ஆங்கிலத்தில் தந்தி முறைப் பயிற்சி பெறுவதற்கே ஒருவர்க்கு இப்போது ஆறு திங்கள் முதல் பன்னிரண்டு திங்கள் வரை ஆகின்றன. அவ்வாறிருந்தும் தவறுகள் பல நேர்வதைக் காண்கிறோம்.

பயிற்சி பெறுவோர் ஒலியைக்கேட்டவுடன் ஒரு சிறிதும் தாமதிக்காமல் எழுத்தையறியவும், எழுத்தைக் கண்டவுடன் ஒலிக்குறிக் குழுவைத் தானுகவே மனக்கண்முன் முயற்சியின்றி நிறுத்தவும் ஆற்றல் பெறுகின்றனர்.

இத்தகைய ஆற்றலை 247 தமிழ்எழுத்துக்களையும் 65 வடமொழி எழுத்துக்களையும் கொண்ட தமிழ் மொழியில் பெறுவதற்கு எத்தனை யாண்டுகளாகும்; ஒலிக்குறிக்குழு எவ்வளவு சிக்கல் உள்ளதாயிருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் தமிழில் தந்தி முறை வேண்டாம்; தந்திக்கு மாத்திரம் ஆங்கிலத்தையே கையாளுவோம் என்ற முடிவுக்கு வருவோம்.

இத்தகைய முடிவு இப்பழந் தமிழுக்கு தமிழரே தேடித் தரும் பழிச்சொல்லாகும். மற்ற நாட்டினர் தந்திக் கலையைச் "சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை" என்று இகழ்ந்துரைக்கவும் இடந்தருவதாகும். ஆகையால் இதோ இருக்கிறது தமிழ் மொழிக்கும் ஒரு தனி முறை தந்திக்கு. எழுத்து ஓர் ஒலியின் உருவமாகும். அவ்வொலியை அடிப்படையாகக் கொண்டது இம்முறை. தமிழ் மொழியின் தொன்மைக்கும், மாண்புக்கும் ஏற்ப, இலக்கண விதியையொட்டி ஆங்கில முறையிலுள்ள முதலெழுத்துக்களைக் கையாளுவது போலவே தமிழிலும் ஆக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் முதலெழுத்துக்கள் (உயிர் 12, மெய் 18) 30 "உயிருமுடம்புமா முப்பது முதலே" (நன்னூல்) ஆங்கிலத்தில் உள்ள முதலெழுத்துக்களைக் காட்டிலும் தமிழில் முதலெழுத்துக்களின் எண்ணிக்கை நான்குதான் அதிகம். அவற்றிற்கும் வடமொழி மெய் எழுத்துக்களுக்கும் பின் வருமாறு ஒலிக்குறியீடுகள் அமைப்போம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | .- | க் | . | ஜ் | --.- |
| ஆ | .-.- | ங் | .--- | ஸ் | ----- |
| இ | -.- | ச் | ... | ஷ் | ..-.. |
| ஈ | --.- | ஞ் | --- | ஹ் | ..--. |
| உ | -.. | ட் | -- | | |
| ஊ | -..- | ண் | .- | | |
| எ | ..-. | த் | - | | |
| ஏ | ..-- | ந் | --. | | |
| ஐ | .--. | ப் | .. | | |
| ஒ | .-.. | ம் | -- | | |
| ஓ | -.-- | ய் | -.-. | | |
| ஔ | .--.- | ர் | .-. | | |
| | | ல் | --- | | |
| | | வ் | ...- | | |
| | | ழ் | --.. | | |
| | | ள் | -... | | |
| | | ற் | .... | | |
| | | ன் | -. | | |

'தமிழ்' என்னும் வார்த்தையை முதலெழுத்துக்களாலேயே எழுதவேண்டுமானால் இலக்கணநூல் கூறுவது போல த்+அ, ம்+இ, ழ் என்று எழுதவேண்டி வரும். அவ்வாறே "இந்தி மொழி" என்னும் பதங்களை ஹ்+இ, ந், த்+இ, ம்+ஒ, ழ்+இ என்றெழுதுகிறோம். தமிழ் என்னும் பதத்திற்கு மேற் குறிக்கப்பட்டுள்ள முறைப்படி ஒலிக்குறியீடுகள் த்அம்இழ்)—.— — — —.— ——.. ஆகும்.

'தமிழ்' என்னும் பதத்தை தந்தி மூலமோ கம்பியில்லாத் தந்தி மூலமோ, (Wireless Telegraphy) செலுத்தவேண்டுமானல், செலுத்தும் தந்தி அலுவலகத்தினர் த் அம் இ ழ்' என்னும் முதலெழுத்துக்களுக்குரிய ஒலிக் குறிகளின் — .— — —.— — .— . உதவியினல் செலுத்துவர்.

செய்தியைப் பெறும் தந்தி நிலையத்தினர், கம்பி மூலம் செலுத்தப்பட்ட ஒலிகளை அங்குள்ள கருவியின் உதவியால் அவற்றிற்குரிய முதலெழுத்துக்களைக் கேட்டு, முதலெழுத்துக்களின் உதவியால் அவற்றிற்குரிய சார்பெழுத்துக்களையும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். சார்பெழுத்தைக் குறிக்கும் மெய்யெழுத்தை முதலிலும் அதன்மேல் ஏறி நிற்கும் உயிரினைப் பின்னரும் குறித்தல் வழக்கமாகையால் சார்பெழுத்துக்கு முன்வரும் தனி மெய்யினைக் கண்டுகொள்வதில் ஐயம் எழாது. தந்திப்பயிற்சி பெற்றோர் ஒலிக்குறிகளால் குறிக்கப்படும் எழுத்துக்களை வரி வடிவில் வரைவதற்கு முன்பு மனத்திலேயே வார்த்தையுருவாக்கிக் கொள்ளும் ஆற்றலுடையவர்களாகப்பழகி விடுகின்றனர். ஆதலால் தமிழில் தந்திப்பயிற்சி பெறுவோர்க்கு செய்திகளைச்செலுத்துங்கால் சார்பெழுத்துக்களை முதலெழுத்துக்களாகப் பிரித்தலும், செய்திகளைக் கேட்குங்கால் முதலெழுத்துக்களில் சிலவற்றைச் சார்பெழுத்துக்களாகப் புணர்த்தலும், தம்மில் தாமே முயற்சியின்றி நிகழும் மனப்பழக்கமாகிவிடும்.

ஆங்கில முறையில் ஓர் எழுத்தையும் அதைத் தொடர்ந்துவரும் மற்றொரு எழுத்தையும் குறிக்கும் ஒலிக் குறியீடுகளை வேறுபடுத்த ஒரு நொடிப்பொழுது இடைவேளை விடுதல் முறையாகும். இம்முறையில் சார்பெழுத்தாய் நிற்கும் மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் குறிக்கும் ஒலிக் குறியீடுகளைப் பிரிக்க ஒரு நொடிப்பொழுதும் மற்றெல்லா எழுத்துக்களுக்கும் இடையில் இரு நொடிப்பொழுதும் இடைவேளையாக விடுவோமாயின் ஒவ்வொரு எழுத்தையும் எளிதில் புரிந்து எழுதிக் கொள்ள முடிகிறது என்பது செயல்முறையில் தெளிவாகும்.

ஒலிக்குறிக்குழு எவ்வளவுக்கெவ்வளவு ஒவ்வொரு எழுத்துக்கும் பெரியதாக அல்லது சிக்கலுள்ளதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதனைத் தந்திமூலம் செலுத்துவதும் சேரவேண்டிய இடத்தில் அதைக்கேட்டறிவதும் கடினம். ஆகையால் கூடிய வரையில் அதனைச் சுருக்கமாகவும், எளிதாகவும் அமைக்க வேண்டியது முக்கியம். பெரும்பான்மையான வார்த்தைகளிலுள்ள முதலெழுத்துக்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் மெய்யெழுத்துக்களே உயிரெழுத்துக்களைவிட அதிகம் என்பது புலனுகும். ஆகையால் உயிரெழுத்துக்களை விட மெய்யெழுத்துக்களுக்கு மிகச் சுலபமான ஒலிக்குறியீடுகளை அமைப்பது சிறந்தது.

உயிரெழுத்துக்களில் 'ஔ' மெய் யெழுத்துக்களில் 'ங், ஞ்' ஆய்தவெழுத்து "ஃ" தமிழில் வழங்கும் வடமொழி எழுத்

கள் 'ஜ், ஸ், ஷ், க்ஷ், ஹ்'
லியன அடிக்கடி உபயோ
படாத எழுத்துக்கள்.
கையால் அவைகட்கு மிகப்
ிய ஒலிக்குறிக் குழுவினை
மக்கலாம். ஆய்தவெ
்து எப்பொழுதோ ஒரு
உபயோகப்படுகிறது.
கையால் அதற்கென தனி
ிடதோர் ஒலிக்குறியின்றி
ினை முப்புள்ளி எனறும்
ப்பிடலாம். வடமொழி
த்துக்களில் 'க்ஷ' என்னும்
த்தை 'ட்ச் என்னும் இரு
ழ் எழுத்துக்களால் பெரும்
ும் ஒலி வேற்றுமையின்
குறிப்பிடலாமாகையால்
க்கங் கருதி அதற்கும்
ிப்பட்டதோர் ஒலிக்குறி
ண்டியதில்லை

ஆங்கிலத்தில் செய்தி
னுப்புவதுபோல் அவ்வளவு
கமாகத் தமிழிலும் தந்தி
ும் செய்தி அனுப்பமுடி
என்னும் ஓர் கேள்வி எழ
ம். இரு மொழிகளிடையே
ள வேற்றுமைகள் பல
கையால் இதற்குத் திட்ட
ள பதில் கூறுவதற்கில்லை.
ருப்பினும் ஆங்கிலச் சொற்
த் தமிழிலும் எழுத்துக்கு
த்து சமமாக எழுதி, அவற்
ுள்ள முதலெழுத்துக்களை
ணிப்பார்த்தால், தமிழில்
ுதப்பட்ட சொற்களிலுள்ள
தலெழுத்துக்களின் எண்
ிக்கையை விட குறைவா
வா அல்லது சமமாகவோ
ருக்கும். (எடுத்துக்காட்டு)
NDON (6)லண்டன்-ல்
ணட் அன் (6) தமிழ்-த் அம்
ழ் (5)THAMIZH (7)

ஆயைால் ஆங்கிலச்செய்தி
ள எவ்வளவு வேகமாக
னுப்ப முடியுமோ ஏறக்
றைய அவ்வளவு வேகமாகத்
மிழ்ச் செய்திகளையும் தந்தி
லம் செலுத்தமுடியும் என்று
றலாம்.

ELEPHANT — யானை

DO NOT COUNT — எண்
ணதே

இவற்றில் தமிழ் எழுத்துக்
ளின் எண்ணிக்கை குறைவு.
கையால் இவைபோன்ற சொற்களை ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழில் தந்தி மூலம் குறுகிய கால அளவில் செலுத்தமுடியும்.

DESK — சாய்வு மேஜை

THEY ATE — அவர்கள் சாப்பிட்டார்கள்

இவைபோன்ற சொற்களில் ஆங்கில எழுத்துக்களைக் காட்டிலும் தமிழ் முதலெழுத்துக்களின் எண்ணிக்கை அதிகம். இச்சமயங்களில் தமிழ்ச் சொற்களைச் செலுத்த ஆங்கிலச் சொற்களைக்காட்டிலும் சற்று அதிக நேரமாகும். ஆகையால் சராசரி கணக்கிட்டுப்பார்த்தால் இரு மொழிகளிலும் காலக்கணக்கு ஏறக்குறைய ஒன்ருகும் என்பது தெளிவாகும்.

எண்கள், நிறுத்துக்குறியீடுகள் முதலியவற்றைக் குறிக்க ஆங்கில முறையில் கையாளப்படும் ஒலிக் குறியினங்களையே தமிழில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏனெனில் அவைகள் ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் பொதுவானவை. தந்தித் துறையில் கையாளப்படும் சுருக்கப்பெயர்களுக்குத் தமிழின் தனித் தகைமைக்குத் தக்கவாறு தமிழில் சுருக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் தமிழில் தந்தி முறை செயல்படுங்காலைதான் தேவை. ஆகையால் அவைகள் இங்கு சேர்க்கப்படவில்லை.

தமிழில் உயிர் மெய்யெழுத்துக்களுக்குத் தனி வரிவடிவு உண்டு. ஆங்கிலத்திலோ உயிரையும், மெய்யையும் தனித் தனியாகப் பிரித்து எழுதுகின்றனர். தமிழில் தனித் தனிச் சார்பெழுத்துக்கள் இல்லையாகுல் நாமும் ஆங்கிலத்தில் எழுதுவது போல் உயிரையும், மெய்யையும் பின் வருமாறு பிரித்து எழுதவேண்டி வரும்.

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | த்-அ | ம்-இ | ழ் |
| THAMIZH | THA | MI | ZH |

இதனை அடிப்படையாகக் கொண்டதுதான் இம்முறை.

—அ. குப்புசாமி.

## ஏர்முனையில் சோகம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் அந்தவிளைநிலங்களுக்
ம் உழவர்களுடைய உழைப்
க்கும் அந்த விளைநிலங்
ள் தரும் பலனுக்கும் மத்தி
ல் பண்ணையாரின் பரம்பரை
த்தியதை குறுக்கே நிற்
றது. சட்டத்தில் விடப்பட்
ள்ள சந்து பொந்துகளின்
ழியாக அதிகாரத்தின் கரம்
ய்ந்து உழவர்களைத் தடுத்து
றுத்துகிறது! சட்டத்தின்
றைபாடுகளை நீக்க அரசாங்
ம் தாமதிக்கிறது!

அரசாங்கம் செய்துவரும்
ாமத்தின் காரணமாக, 2000
ழவர் குடும்பங்கள் நங்க
ரம் பகுதியில் ஆதரவின்றி
டப்பட்டுள்ளனர்! நீண்ட
ாலமாக நிலத்தை விளை
த்துவந்த அவர்கள் திடீரென்று வெளியேற்றப்பட்டு, மலபாரிலிருந்தும் மன்னார்குடியிலிருந்தும் கூலியாட்கள் கொண்டுவரப்பட்டு, பயிர்த் தொழிலை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். விரட்டப்பட்டுள்ள 2000 உழவர் குடும்பங்கள், நிர்க்கதியாய் விடப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்!

தேர்தல் காலத்தில் உழவர்களின் வாக்குரிமைகளைப் பெரும் நோக்கத்துடன் சென்னை அரசாங்கச் சட்டம் வந்தது. தேர்தலில் ஒருவாறு சமாளித்துக்கொண்டதும், தாங்கள் போட்ட சட்டத்தைச் சரியானபடி அமுல் நடத்த அரசாங்கம் முயலவில்லை. சட்டத்தில் காணப்படும் ஓட்டை உடைசல்களை அடைக்க அரசாங்கம் முற்படவில்லை! மந்தமான போக்கில், ஆயிரக்கணக்கான உழவர்கள் வெளியேற்றப்படுவதைப் பார்த்தபடி அரசாங்கம் வாளா இருக்கிறது,

சட்டத்தை அரசாங்கம் போட்டது. அந்தச் சட்டத்தைப் பாதுகாக்க சட்டத்தில் இருக்கும் குறைபாடுகளை மாற்றிஉழவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது.

சட்டம் வந்தபிறகு, நிலவுடமையாளர்கள் அதை எதிர்த்து நின்றனர், உயர் நீதி மன்றம்வரைச் சென்றனர். சட்ட நிபுணர்கள் அரசாங்கச் சட்டத்தில் இருந்த சில குறைகளைக் கண்டுபிடித்துத் தந்தனர், கை ஏர், மாட்டு ஏர் வாரதாரர்களுக்கு இந்தச் சட்டம் செல்லாது என்ற தீர்ப்பை மிராசுதாரர்கள் வாங்கி வந்தனர். அதன் பலன் நங்கவரத்தில் 2000 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர், வேதனை எல்லைக்கு விரட்டியடிக்கப்படுகின்றனர்.

சட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்டபின்னும், அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

சட்டசபை முதன் முறையாகக் கூடியநேரத்தில், சட்டத்தைத் திருத்தவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக்கொண்டபொழுது, விரைவில் திருத்திவிடுவதாக அரசாங்கம் அறிவித்தது. அதற்குப்பின்னும் வேண்டுகோள்களும் நேரிடைப்பேச்சுகளும் நடந்த போதிலும் "திருத்தி விடுகிருேம், பொறுங்கள், பொறுங்கள்!" என்று அரசாங்கம் சமாதானப்படுத்தி வந்தது. ஏன் இவ்வளவு தாமதம்? உயர் நீதி மன்றத் தீர்ப்பு வந்து எவ்வளவு காலமாயிற்று? அதற்குப்பின் சட்டசபை கூட இரண்டு தடவைக்கூடி கலைந்துவிட்டது. சட்டத் திருத்தங்கள் மட்டும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை,

அரசாங்கத்தின் தாமதம்-அரசாங்கத்தின் அலட்சியப் போக்கு-உழவர்களைச் சொல்லொணுக் கொடுமைகளுக்கு ஆளாக்கிவிட்டது. தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க உழவர் கூட்டம் முயல்கிறது, வாழும் உரிமையை இதுவரை பயிரிட்டு வந்த நிலங்களில் தொடர்ந்து பயிரிடும் உரிமையைப் பாதுகாக்க, நங்கவரத்தைச் சார்ந்த உழவர் அணி அத்தொகுதி சட்டசபை பிரதிநிதியாக விளங்கும் தோழர் கருணாநிதி அவர்கள் தலைமையில் திரண்டுள்ளது.

தங்கள் உரிமையைப் பாதுகாக்க நங்கவரத்து உழவர்கள் துவங்கியுள்ள இப்பெரு முயற்சிக்கு நல்லாதரவுதர கழகம் முனைந்துள்ளது.

நெருக்கடியான நிலைமை கழகத்தினர் உண்டாக்குவதாக கனம் காமராசர் குற்றஞ்சாட்டுகிருர். நெருக்கடியான நிலைமை அரசாங்கம் உண்டாக்கியுள்ளது. சட்டத்தின் குறைபாடுகளைப் போக்காமல், நிலைமையை நெருக்கடியாக்கிய குற்றம் அரசாங்கத்தையேசாரும்!

போடப்பட்ட சட்டத்தை அரசாங்கம் பாதுகாக்கத்தவறிவிட்டது. கொடுத்த வாக்குறுதிகளை அது நிறைவேற்ற தவறிவிட்டது.

ஏர்முனையில் ஏற்படுகிற சோகம் நாடு பூராவும் உள்ள எல்லோரையும் பாதிப்பதாக முடியும். உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள்களை விடுக்கும் நேரத்தில் உழவர்களின் இடுப்பொடிக்கும்-வயிற்றிலடிக்கும் வேலை நடைபெறுகிறது-

நிலைமை மேலும் சீர்கேடடையும்முன், அரசாங்கம் விரைவில் சட்டத்தின் குறைபாடுகளைத் திருத்தி, பாதிக்கப்பட்டுள்ள உழவர்களுக்கு பாதுகாப்பு தர முன்வருவதாக! ○

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுடைய தலைமையை ஏற்று கட்டாய இந்தியை எதிர்த்துப் போராடிஞர்கள். ஆயிரம் பேர்களுக்குமேல் சிறை புகுந்தார்கள். தாளமுத்து நடராசன் ஆகிய இருவர் தங்கள் உயிரையேக்காணிக்கையாகத் தந்தனர். இன்றும் அந்த இருவரின் பெயர்கள் தமிழர்களின் இல்லங்களில் புனிதமாகப் போற்றப்படுகின்றன.

இந்தப் போராட்டம் தமிழின் மறுமலர்ச்சி இயக்கமாக மாறியது. பழந்தமிழ்ப் பெருமைகள் ஆராயப்பட்டன, தூய தமிழ்—இனிய தமிழ் பேசும் முறை வளர்ந்தது. மொழியில் துவங்குகிற மறுமலர்ச்சி தேசிய உணர்ச்சியை எழுப்பும் என்பது வரலாறு கண்ட உண்மை. தனித் தமிழ் நாடு என்ற எண்ணம் பரவி, தமிழ் நாடு தமிழருக்கே என்ற முழக்கம் கிளம்பியது. அந்த முழக்கத்தின் அடுத்த வளர்ச்சிதான் திராவிடநாடு இலட்சியம்.

நான் இவற்றை விரிவாகக் கூறுவதற்குக் காரணம், ஒரு மொழியை அதனுடன் சிறிதும் தொடர்பில்லாத மற்ெருரு மொழி பேசியவர்களிடைப் புகுத்திஞல், கிளம்புகிற தகராறு மொழிப் பிரச்சினையுடன் நிற்பதில்லை, மொழிக்குப் பின்ஞல் இருக்கும் பண்பாடு, தேசிய உணர்ச்சி, போன்ற பலமான சக்திகளுடன் போராடுவதாக முடியும்

### அடுத்த இதழில்:—

**இரா. செழியன் எம். ஏ. தீட்டும்**

**"தண்டனை" என்ற ஓரங்க நாடகம்**

**இடம்பெறும்.**

இந்தியைப் பரப்புவது ஒரு சாதாரன மொழிப்பிரச்சினையாக இன்று இல்லை. ஒருபகுதி மற்றொருபகுதியை அடக்கியாள நினைக்கும் அரசியல் ஆதிக்கத்தின் அறிகுறியாக இருக்கிறது.

சிறிது காலத்துக்கு முன் நமது பிரதமமந்திரி, இந்தி மட்டுமன்றி அரசியல் சட்டத்தில் 8வது அட்டவணையில் தரப்படும் எல்லா மொழிகளும் தேசிய மொழிகளாகக் கருதப் படவேண்டுமென்று கூறினார். இதை இந்தியாவிலுள்ள எல்லா மொழியினரும் வரவேற்பார்கள் என நினைக்கிறேன்.

மற்ற உயர்ந்த பதவியிலிருக்கும் அரசாங்கப் பிரமுகர்களும்- அவர்களில் சிலர் மிக மிக உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள், அவர்களும் இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்று அறிவித்துவருகிறார்கள். அரசாங்கத்தின் உயர்ந்த பொறுப்புகளில் இருப்பவர்களின் பேச்சுக்களில் தரப்படும் மாறுபாடுகள் கவனிக்கப் பட வேண்டியவை. அரசாங்கம் அவைகளுக்கு சரியான விளக்கந்தரவேண்டும். இந்தியாவின் தேசியமொழி பற்றி இந்திய அரசாங்கம் உறுதியான விளக்கத்தைத்தரவேண்டும். இந்தி மட்டுமா, அல்லது எல்லா மொழிகளுமா ? இதில் ஒளிவு மறைவின்றி சரியான விளக்கம் தேவை. பல தேசிய இனங்கள் உள்ளடங்கிய இந்தியத் துணைக்கண்ட மக்களுக்கு நிலைமை எதுவெனச் சரியாகத் தெரிய வேண்டும். சிங்களம்

ஒன்று மட்டும் என்
இலங்கை அரசாங்க முடி
குப்பின் அங்கு எழுந்த வி
வுகளை நாம் மறந்து வி
கூடாது. இந்திய அரசாங்
அதைக் கவனித்து பலன்பெ
வேண்டும்.

இந்தியை இந்தியில்லா
மற்றவர்களிடைக் கட்டா
படுத்துவதால், மற்றமொ
யினர்களுக்கு மட்டுமல்லாம
இந்தி பேசுபவர்களுக்
பெரியதொரு தீங்கு இழை
கப்படுகிறது என்பதைத் தெ
வித்துக்கொள்ள விரும்
கிறேன். 'உங்கள் இனம், ப
பாடு, மொழி ஆகியவைதா
எல்லாவற்றையும் விட உய
தது. மற்றவர்களையெல்லா
அடக்கியாளும் தகுதியுடை
வர்கள் நீங்கள்தான்?, எ
ஜெர்மன் மக்களிடம் இட்
பேசினான். முதலில் அந்
பேச்சுக்கள் அவர்களு
இனிப்பாக இருந்த போதி
கடைசியில் அதுவே அ
களுக்குப் பெருங்கேடாக மு
தது. அத்தகைய தவ
அத்தகைய சோக வரலாற்
மீண்டும் இங்கு உண்டா
வேண்டாமென்று கூறுகிறே

கடைசியாக ஒன்றைமட்டும் ப
வுடன் தெரிவித்துக்கொள்ள விரு
கிறேன், பயத்தினாலோ, நயத்தினா
உலகிலுள்ள எந்தச் சக்தியின் து
கொண்டும் இந்தி ஏகாதிபத்தி
தின்கீழ் தமிழகத்தை அடக்கி
முடியாது என்பதுதான் !


நல்ல செய்தி ! அரிய விருந்து !! புதிய முறைகள்

சர்வகட்சிக் கொடி வணக்கத்துடன்

செப்டம்பர் 8-ம் தேதி

ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

சென்னை ஒற்றைவாடையில்

ஜே. சுகுமார் — நெல்லை அருணன்

நடிக்கும்

J. V. R. சபையாரின்

வீரபாண்டிய

கட்டபொம்மன்

ஏராளமான பொருட் செலவில்

புதுமுறைக் காட்சியமைப்புகள் புரட்சி மிக்க வசனங்கள். மருட்சி தரும் வாட்போர்- மற்றும் இசை, நடனம், கேளிக்கைகள் நிறைந்தது.

காணத் தவறாதீர்கள் !

பயிற்சி: ஜே. வி. ராகவன்

கட்டணம்: 5, 2, 1, அணா 8.


## நீராவிக் கப்பல் உண்டான கதை-(2)



17 வயதான புல்டன் இங்கிலாந்துக்கு வந்து, லண்டனில் புகழ்பெற்ற ஒரு ஓவியரின் கீழ் ஓவியக்கலையைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். ஓவிய நுட்பங்களை விரைவில் அவன் கற்றுக்கொண்ட போதிலும், புதிய பொருள்களை கண்டு பிடிக்கும் ஆர்வம் அவனிடம் அதிகமாக இருப்பது கண்ட ஓவிய ஆசிரியர், ஓவியத்தை விட்டுக் கப்பல் கட்டுந் தொழிலுக்குப் போகும் படி அறிவுரை தந்தார். ஓவியக்கலையை விட்டுத் துறைமுகங்கள் அருகே புல்டன் வந்தான்,

அங்கு சிலகாலம் வேலை செய்த பின், ஐரோப்பாவுக்குச் சென்றான். அங்கு இருக்கும் பொழுது, சலவைக் கல்லை அறுக்கவும் இழைக்கவும் உதவும் இயந்திரத்தையும், கயிறுகளை முறுக்கித் தரும் இயந்திரத்தைபும் அவன் கண்டுபிடித்தான். ஆறுகளின் மேலும் இரும்புப் பாலங்கள் கட்டுவதை அவன் முதன் முதலாகச் செய்து காட்டினான், இரண்டு ஆறுகள் ஒன்றை யொன்று கடக்கும் இடத்தில் கட்டப்படும் "லாக்" முறையை அவன் ஆரம்பித்தான்.

தான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு புல்டன் சிறிய நீராவிப் படகு ஒன்றைக் கட்டி, பாரிஸ் நகருக்கருகில் சைன் நதியில் அதை விட்டான். படகு தண்ணீரில் அமிழ்ந்தது ! வேடிக்கை பார்த்தவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். தோல்வியால் தளர்வுறாமல், அமிழ்ந்த படகை வெளியே எடுத்து, இன்னும் பெரிய படகு ஒன்றைச் செய்து பழைய படகிலிருந்து இயந்திரங்களைப் பூட்டி தண்ணீரில் மீண்டும் விட்டான். இந்தத் தடவை படகு அமிழவில்லை, ஆனால் மெதுவாக நகர்ந்து சென்றது

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 556